பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண். 43

# பள்ளிக் கல்வி

## 2011-12


திரு.சி.வி.சண்முகம்

பள்ளி கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்



©

தமிழ் நாடு அரசு

2011


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கொள்கை | 1 |
| 2 | நிதி ஒதுக்கீடு | 7 |
| 3 | பகுதி – 2 திட்டங்கள் (2011–2012) | 8 |
| 4 | கொள்கை மற்றும் திட்டங்கள் | |
| 1. | தொடக்கக் கல்வி | 11 |
| 2. | அனைவருக்கும் கல்வி திட்டம் | 16 |
| 3. | இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி | 33 |
| 4. | அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் | 55 |
| 5. | மெட்ரிகுலேசன் பள்ளிகள் | 59 |
| 6. | ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 61 |
| 7. | பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 69 |
| 8. | அரசுத் தேர்வுகள் | 73 |
| 9. | ஆசிரியர் தேர்வு வாரியம் | 78 |
| 10. | தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் | 80 |
| 11. | பொது நூலகங்கள் | 83 |

## பள்ளிக் கல்வித் துறை

### கொள்கை

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு**

*எளிய பொருளையுடைய சொற்களைப் பிறர் நெஞ்சில் பதியுமாறு பேசிப் பிறர் சொல்வதிலுள்ள நுட்பமான பொருளைக் காண்பதே அறிவாகும்.*

கல்வியானது, சமூகத்தில் குவிந்திருக்கும் அறிவுத்திறன் மற்றும் பண்புகளை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் ஒரு வழிமுறையாகும். கல்வியானது குழந்தைகளின் படைப்புத் திறனையும், அழகுணர்ச்சியையும் அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்த வேண்டும். கல்வி நம்மைச் சூழ்ந்துள்ள உலகியல் அறிவை வளர்க்கிறது. மேலும் கல்வி, அனைத்து விவரங்களையும் பகுப்பாய்வுசெய்து சரியான முறையில் புரிந்துகொள்ளும் ஆற்றலைக் குழந்தைகளுக்கு அளிக்கிறது.

பாடநூல்களிலுள்ள பாடங்களையும், கவிதைகளையும் மட்டுமே கற்பது கல்வி ஆகாது. இவற்றுடன் வாழ்க்கையைப் பற்றி அறிய உதவுவதும் கல்வி ஆகும். கல்வியின் முதன்மையான மற்றும் முக்கியமான குறிக்கோள் ‘குழந்தையின் முழுமையான வளர்ச்சியே’. அதே நேரத்தில் குழந்தைகளிடம் புதைந்துள்ள திறன்களை



வெளிப்படுத்தி மேன்மேலும் வளர்ச்சி அடைய வழிவகுப்பதும் கல்வி ஆகும். கல்வியானது நற்பண்புகளையும், நல்ல குறிக்கோள்களையும் குழந்தைகளிடையே விதைத்து அவர்கள் சமுதாயத்துடன் இணைந்து அமைதியான முறையில் வாழ வழிகாட்டுகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய குறிக்கோள் மாநிலத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் தரமான கல்வியை இன்பமாக, அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையில் கற்கும் வசதியை அளிப்பதேயாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் என்று சமீபத்தில் அறிவித்துள்ளார்கள். அதன் பயனாக, தமிழ்நாட்டின் கிராமப்புற குழந்தைகள் மேல்நிலைக் கல்வி பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். இப்பள்ளிகளில் வெகுநாட்களாக வேலையின்றி வாடும் பணிநியமனம் பெற உள்ள 900 முதுகலை ஆசிரியர்களில், முக்கியமாக தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 100 பேர் புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்ய அறிவிப்பு செய்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராளமனதுடன் அளிக்கப்பட்ட 1000 பணியிடங்களில் 100 தலைமையாசிரியர்கள் மற்றும் 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் அடங்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பள்ளிக் குழந்தைகளிடம் அன்பும் அக்கறையும் கொண்டுள்ளார் என்பதைத் தற்போது +1

மற்றும் +2 படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச மடிக்கணினி, 2011–2012 ஆம் கல்வியாண்டில் இரண்டு ஜோடி சீருடை, 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் நான்கு ஜோடி சீருடை மற்றும் ஒரு ஒரு ஜோடி காலணியும் வழங்கப்படும் என்ற அறிவிப்புகளின் மூலம் தெளிவாக வெளிப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தரத்தைச் சிறந்த தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தரத்திற்கு இணையாக உயர்த்தும் முதல்வர் அவர்களின் சீரிய நோக்கமானது ஆறாம் வகுப்பு முதல் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டை வழங்குதல் மற்றும் மாணவியர்களுக்கு பாவாடை, தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீஸ் வழங்க முடிவெடுக்கப் பட்டதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இது மாணவ மாணவியர்களிடம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. வறுமையான குடும்பச் சூழ்நிலையினால் உயர்கல்வியைத் தொடர இயலாத மாணவர்களும் கல்விபெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்பு, மேனிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தலா 1500 ரூபாயும் மேனிலை இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு தலா 2000 ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுமென அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாநிலத்திலுள்ள குழந்தைகளுக்கு மிகச் சிறந்த பயன்களை அளிக்கும் சீரிய நோக்கத்துடன் அதி நவீனமான புதியதொரு செயல்முறைத்



திட்டத்தினை செயல்படுத்த முடிவு செய்துள்ளார்கள். இதன்படி குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் பயன்படுத்தும் வகையில் “**ஒருங்கிணைந்த அறிவுப் பூங்கா**” (Integrated Knowledge Park) உருவாக்கப்படும். இந்த பூங்காவானது, குழந்தைகள் புத்தகங்களில் உள்ள பாடங்களை மட்டுமல்லாது, அதற்கு மேலும் தங்களது அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் அனைத்து வசதி, வாய்ப்புகளையும் தன்னிடையே கொண்டிருக்கும்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் சிறப்பான வழிகாட்டுதலினால், பள்ளிக் கல்வித் துறையானது பெருமைகள் பல அடைந்து அகில இந்திய அளவில் மிக உயர்ந்த நிலையை அடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**தொலைநோக்கு**

தரமான கல்வியை எளிதாக, மகிழ்ச்சியான சூழ்நிலையில், தொடக்கநிலை மற்றும் இடைநிலைகளில் சுமையில்லாமல் அனைத்துக் குழந்தைகளும் பெறுவதற்கு வழிவகுத்தல் மற்றும் குழந்தைகளின் நலனிற்காகப் பாதுகாப்புடன் கூடிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

**குறிக்கோள்கள்**

- ❖ அனைவரும் எளிதாக அடையும் வண்ணம் சமமான, தரமான கல்வியை தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைகளில் அளித்தல்.
- ❖ மாணவர்கள் அனைத்து வகைகளிலும் முழுமையான வளர்ச்சி அடையப் பாடுபடுதல்.

❖ அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகளுக்கேற்ப கலைத்திட்டத்தையும் மதிப்பீட்டு முறைகளையும் அமைத்தல்.

❖ மாணவர்களின் அறிவுத்திறன், செயலாற்றல் ஆகியவற்றை ஊக்குவித்து வளரச் செய்து, அவர்களது உடல் மற்றும் சிந்திக்கும் திறன்களை முழு அளவில் வெளிக் கொணரல்.

❖ பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் பயன்பெறும் வண்ணம் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

❖ மகிழ்ச்சியான கற்றல் சூழ்நிலையைக் கற்றல் பயிற்சிகள், தானே அறிதல் மற்றும் ஆழ்ந்து ஆராய்தல் அகியவற்றின் மூலம் உருவாக்கி மாணவரை மையப்படுத்தி எளிய முறையில் கல்வியை வழங்குதல்.

❖ தரமான கல்வியை இயன்றவரையில் மாணவர்களின் தாய்மொழியிலேயே வழங்குதல்.

❖ மாணவர்கள் தங்களது எண்ணங்களை அச்சமின்றி வெளிப்படுத்துவதற்கு அளவற்ற வாய்ப்புகளை வழங்குதல்.

❖ ஆண்டுத் தேர்வுகள் எளிய நெகிழ்வுத் தன்மையுடன், வகுப்பறையில் கற்றவற்றை உள்ளடக்கிய முறையில், ஒவ்வொரு பருவத்தின் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன், மாணவர்களிடையே எவ்வித கவலையோ, அச்சமோ, மன அழுத்தமோ ஏற்படுத்தாத வகையில் அமையச் செய்தல்.

❖ மாணவர்கள் கற்றவற்றை வெளியுலக நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி அறியும் ஆற்றலை உருவாக்குதல்.

❖ கற்றல் என்பது பாடங்களை மனனம் மட்டுமே செய்யும் முறையில் இருந்து வேறுபடச் செய்தல்.



❖ நாட்டின் குடியரசு அமைப்பின் கீழ் உள்ள சமூகப் பிரச்சனைகளைக் களைவதற்கு அடையாளம் காணும் ஆற்றலை மாணவர்களிடையே ஏற்படுத்துதல்.

பள்ளிக் கல்வித் துறையானது மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கும், மேலும் அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதற்கும் பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம், அரசுத் தேர்வுகள் இயக்ககம், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் மற்றும் பொது நூலகங்கள் இயக்ககம் ஆகியவற்றின் உதவியுடன் இயங்குகிறது. பள்ளிக் கல்வித் துறையானது இரு பெரும் கல்வித் திட்டங்களான அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA) மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) ஆகிய திட்டங்களின் துணையுடன் சீரிய முறையில் செயல்படுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் ஆகியவை முறையே ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கும், பாடப்புத்தங்கள் அச்சிடுவதற்கும் பெருமளவில் உதவுகின்றன.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண்.43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2011–2012 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு **ரூ.13333.66** கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.**1820.86** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

| 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **கணக்குத் தலைப்பு** | | **திட்டப் பணிகள்** | **திட்டத்தில் சேராதது** | **மொத்தம்** |
| ***வருவாய் பகுதி*** | | | | | |
| 2059 | பொதுப் பணிகள் | | **0.00** | **3740.00** | **3740.00** |
| 2202 | பொதுக் கல்வி | | | | |
| | 01 | தொடக்கக் கல்வி | 89196.84 | 558985.05 | 648181.89 |
| | 02 | இடைநிலைக் கல்வி | 42932.57 | 581187.52 | 624120.09 |
| | 04 | வயது வந்தோர் கல்வி | 1000.01 | 117.55 | 1117.56 |
| | 05 | மொழி வளர்ச்சி | 2.53 | 898.57 | 901.10 |
| | மொத்தம் – பொதுக் கல்வி | | **133131.95** | **1141188.69** | **1274320.64** |
| 2204 | போட்டி விளையாட்டுகளும், இளைஞர் நலப்பணிகளும் | | 499.55 | 192.03 | 691.58 |
| 2205 | கலையும், பண்பாடும் | | 0.01 | 4974.71 | 4974.72 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | | 7089.73 | 65.64 | 7155.37 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | | 0.00 | 615.86 | 615.86 |
| 2251 | தலைமைச்செயலகம் – சமூகப் பணிகள் | | 0.00 | 480.40 | 480.40 |
| | நிகர மொத்த வருவாய்ப் பகுதி | | ***140721.24*** | ***1147517.33*** | ***1288238.57*** |
| ***மூலதனச் செலவு பகுதி*** | | | | | |
| 4202 | மூலதனச் செலவு | | 41364.53 | 0.00 | 41364.53 |
| | மொத்த மூலதனச் செலவு பகுதி | | ***41364.53*** | ***0.00*** | ***41364.53*** |
| ***கடன்கள் பகுதி*** | | | | | |
| 7610 | அரசுப் பணியாளர் முதலானோருக்குக் கடன்கள் | | 0.00 | 5.01 | 5.01 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | | 0.00 | 0.50 | 0.50 |
| | மொத்த கடன்கள் பகுதி | | ***0.00*** | ***5.51*** | ***5.51*** |
| | **நிகர மொத்தம்** | | **182085.77** | **1151262.84** | **1333348.61** |
| | கூட்டுக – திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்) | | | | 17.00 |
| | **மான்யக் கோரிக்கை எண்.43ன் நிகர மொத்தம்** | | | | **1333365.61** |



## 2011–2012ம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

| **தொடர் எண்** | **திட்டப்பணிகளின் விபரம்** | **ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **தலைமைச் செயலகம் – பள்ளிக்கல்வித் துறை** | | |
| 1. | தலைமைச் செயலக பள்ளிக்கல்வித்துறையை கணினிமயமாக்கல் | 8.00 |
| **தொடக்கக் கல்வி** | | |
| 2. | புதிய அலுவலக SIEMAT கட்டிடத்தில் உள்ள கூட்ட அரங்கில் மரத்தளவாடங்கள் மற்றும் குளிரூட்டும் பெட்டிகள் நிர்மானித்தல் | 10.00 |
| 3. | 5 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுதல் | 87.50 |
| 4. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு பயனற்ற ஈப்புகளை நீக்கி, 2 புதிய ஈப்புகள் வாங்குதல் | 11.00 |
| 5. | 6 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (6 x ரூ.40,000) | 2.40 |
| 6. | தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் கணினி அறை மற்றும் மையக் கணினி அறை குளிரூட்டு பெட்டிகள் நிர்மானித்தல். | 1.00 |
| 7. | தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு 5 கணினிகள் பிரிண்டருடன் வழங்குதல் | 2.00 |
| 8. | 32 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கூடுதலாக கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வழங்குதல். | 12.80 |
| **பள்ளிக்கல்வி** | | |
| 9. | 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்குதல் | 100.00 |
| 10. | 100 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்துதல் | 40.00 |
| 11. | 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வுக்கூடம் அமைத்துக் கொடுத்தல் | 100.00 |
| 12. | 100 அரசு உயர்நிலை பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல் | 40.00 |

| | | |
|---|---|---|
| 13. | 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மை தொழிற்கல்வி பிரிவில் வேளாண்மை உபகரணங்கள் வழங்குதல் | 50.00 |
| 14. | பள்ளிக்கல்வி இயக்கத்திற்கு தபால் அனுப்புகை பிரிவிற்கு தேவையான எடைபோடும் கருவிகள் மற்றும் தளவாட உபகரணங்கள் வாங்குதல் | 0.10 |
| 15 | அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கணினி மூலமாக மொழி ஆய்வகங்கள் ஏற்படுத்துதல் | 25.00 |
| **அரசுத் தேர்வுகள்** | | |
| 16 | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக கூடுதலாக 2 அலுவலக ஈப்புகள் வாங்குதல் | 16.00 |
| 17. | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக ஜெனரேட்டர் இயந்திரம் வாங்குதல் | 8.50 |
| 18. | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக மந்தண ஆவணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கும் மற்றும் ஆவண அறை தரைதளம் மற்றும் முதல் மாடியுடன் கூடிய கட்டடம் கட்டுதல் | 200.00 |
| 19. | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பினை நிறுவுதல் | 4.50 |
| 20. | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக நவீன துறையிடை தொலைபேசி மையத்தை ஏற்படுத்துதல் | 2.50 |
| **பொது நூலகங்கள்** | | |
| 21. | மறைமலை அடிகள் நூல்நிலையம் மற்றும் தலைமைச் செயலக நூல் நிலையத்தில் உள்ள அரிதான பழையபுத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பாதுகாத்தல் மற்றும் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு மற்றும் தொல்லியல் துறையில் உள்ள பழைய ஆவணங்களை டிஜிட்டல் தொழில் நுட்பம் மூலமாக பாதுகாத்தல் | 10.00 |
| **ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி** | | |
| 22. | தஞ்சாவூர் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 49.95 |
| 23 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் கணினி மயமாக்கத்தினை மேம்படுத்துதல் | 3.00 |



| | | |
|---|---|---|
| **ஆசிரியர் தேர்வு வாரியம்** | | |
| 24. | ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பயன்பாட்டிற்காக கணினிகள், லேசர் பிரிண்டர்கள், கணினி மேசைகள், குளிரூட்டும் பெட்டிகள் மற்றும் நகலெடுக்கும் கருவி ஆகியன வாங்குதல் | 13.75 |
| **மெட்ரிக் பள்ளிகள்** | | |
| 25. | சென்னை, மதுரை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல், கோவை மற்றும் சேலம் ஆகிய 10 மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு 10 கணினிகள் மற்றும் உபகரணங்கள்வழங்குதல் | 5.00 |
| 26. | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் நிகரி சாதனம் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 1.00 |
| | **மொத்தம்** | **800.00** |

## கொள்கை மற்றும் திட்டங்கள்

## 1. தொடக்கக் கல்வி

### 1.1. முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியை அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் முனைப்போடு தமிழகத்தில் தொடக்கக்கல்வித் துறை செயல்பட்டு வருகிறது. தொடக்கக் கல்வித்துறையின் கீழ் 34226 தொடக்கப் பள்ளிகளும், 10614 நடுநிலைப்பள்ளிகளும் உள்ளன. தொடக்கக்கல்வித் துறையில் 54,90,000 மாணவர்களுக்கு கல்வி வழங்கப்படுகிறது.

இப்பள்ளிகளில் 2,14,440 பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு அனைவருக்கும் கல்வி என்னும் இலக்கை அடைவற்காக பணியாற்றுகிறார்கள்.

### 1.2. தொலைநோக்கு

தரமான கல்வி அளிப்பதுடன், மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியோடு ஆக்க பூர்வமான செயல்திறன் மற்றும் நற்பண்புகளை அளித்தல் என்பதே தொடக்கக் கல்வித்துறையின் தொலைநோக்காகும்.

### 1.3. குறிக்கோள்

- ❖ மாணவர் பள்ளிச் சேர்க்கையை பரவலாக்குதல் மற்றும் தக்கவைத்தல்.



- ❖ புத்தகச் சுமையினைக் குறைத்தல்.
- ❖ சர்வதேச தரத்தில் கல்வி வழங்குதல்.
- ❖ போதிய வகுப்பறைகள், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி ஏற்படுத்துதல்.
- ❖ பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கு சிறப்புத் திட்டங்கள் மூலம் தரமான கல்வியை வழங்குதல்.

### 1.4. ஆசிரியர் நியமனம்

பள்ளிகளை வலுப்படுத்தும் நோக்கில் ஆசிரியர் நியமனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் எவ்வித ஒளிவு மறைவின்றி தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

### 1.5. செயல்வழிக் கற்றல் முறை

“செயல்வழிக் கற்றல்” எனும் புதுமையான கற்றல் முறை தொடக்கக் கல்வி நிலையில் அறிமுகப்படுத்தப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையின் சிறப்புபியல்புகள்:–

- ❖ குழந்தைகளை மையமாகக் கொண்டது.
- ❖ திறன்களை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ கற்பவரிடையே தன்முனைப்பு, படைப்பாற்றல், இணைந்து கற்றல் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கிறது.
- ❖ குழந்தைகளை ஊக்குவிக்கும் மையங்களாக பள்ளிகளை மாற்றுகிறது.

### 1.6. ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துதல்

குழந்தைகளை மையமாகக் கொண்டு அவர்களைப் பல்திறன் கொண்டவர்களாக உருவாக்கும் கல்வி முறை செயல்படும் இக்காலச் சூழலில், ஆசிரியர்களின் கற்பிக்கும் உத்திகளை வளப்படுத்திக் கொள்ள பல்வேறு பணியிடைப் பயிற்சிகள் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் ஒத்துழைப்போடு வழங்கப்படுகின்றன.

கலந்தாய்வு மூலம் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் அவர்களுடைய கற்பித்தல் திறனை வளர்க்கும் பொருட்டு மாவட்ட அளவில் நுழைநிலைப் பயிற்சியும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு யோகா மற்றும் தியானப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

### 1.7. நலத் திட்டங்கள்

குழந்தைகளின் வளர்ச்சி என்பது, சமுதாய வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை மனதில் கொண்ட அரசு, பள்ளிக் குழந்தைகளின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

- ❖ 41,65,272 குழந்தைகள் **புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்** மூலம் இலவச மதிய உணவு மூலம் பயன் பெறுகின்றனர்.
- ❖ இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் உள்ள சுயநிதிப் பிரிவு குழந்தைகளுக்கும் மற்றும் அரசின் அங்கீகாரம் பெற்று மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றும் சுயநிதிப்பள்ளிகளில் பயின்று வரும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசப் பாடநூல்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 42,89,334 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.
- ❖ இலவச மதிய உணவுத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் அனைத்து குழந்தைகளுக்கும் இலவசச் சீருடை வழங்கப்பட்டு வருகிறது. 2011–12 ஆம் கல்வியாண்டில் இரு ஜோடி சீருடைகளும், 2012–13 ஆம் கல்வியாண்டு முதல் நான்கு ஜோடி சீருடைகளும் வழங்கப்படும். இதனால் 41,65,272 மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.
- ❖ இலவச பேருந்து பயணச் சலுகைத் திட்டத்தின் கீழ் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவிகள் அவரவர் பயிலும் பள்ளிகளுக்குச் சென்றுவர இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இதனால் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 1,33,652 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்.
- ❖ வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதியானது வருவாய் ஈட்டும் பெற்றோர், தாய், தந்தையர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ மாணவ/மாணவியரின் கல்வி நலன் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்னும் உயரிய எண்ணத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக ரூ.50,000/– தமிழ்நாடு மின்விசை நிதிகழகத்தில் வைப்பு நிதியாக மாணவர்கள் பெயரில் வைக்கப்படும். இதன் மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து மாணவர்கள் கல்வித் தேவைகளுக்கு செலவு செய்யப்படும். 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.3 கோடி ஒதுக்கீட்டில் 600 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

### 1.8. நடமாடும் நூலகம் மற்றும் அறிவியல் ஊர்தி

படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்குவிக்க, பொது நூலக இயக்ககத்தின் ஒத்துழைப்புடன் நடமாடும் ஊர்திகளின் மூலம் நூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. மேலும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து நடமாடும் வகுப்பறைகளாக செயல்படும் அறிவியல் ஊர்திகளின் வாயிலாக, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவியர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் மேம்பாடு அடைய இத்திட்டத்தின் கீழ் அறிவியல் கல்வி அளிக்கப்படுகின்றது.

தொடக்கக் கல்வி இயக்ககமும் அனைவருக்கும் கல்வி இயக்கமும் இணைந்து அனைவருக்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைய பணியாற்றுகின்றன. போதிய உள்கட்டமைப்பு வசதி, கற்றல் உபகரணங்கள், ஆசிரியர் பயிற்சி, மாணவர் சேர்க்கையை அதிகரித்தல், மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய கல்வி மற்றும் பிற பணிகள் அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொடக்கப் பள்ளிகளின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகம், தொடக்கக் கல்வி இயக்குநரின் கண்காணிப்பில் உள்ளது.



## 2. அனைவருக்கும் கல்வி இயக்கம்

அனைவருக்கும் கல்வி இயக்கம் அனைத்து பள்ளி வயது குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி அளித்திட 2001 – 2002 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சிறப்புத் திட்டமாகும். இத்திட்டத்திற்கான தற்போதைய நிதிப் பங்கீடு 65:35 (மத்திய அரசு: மாநில அரசு) ஆகும். 2010, ஏப்ரல் 1–ந்தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 ஆல் அனைவருக்கும் கல்வி இயக்கம் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் நோக்கங்களை அடைகின்ற வகையில் கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது.

2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.1891.42 கோடி ஒதுக்கீடு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் நிதி பங்கீடு ரூ.617.89 கோடி. மத்திய அரசின் நிதி பங்கீடு ரூ.1147.52 கோடி. 13ஆம் நிதிக் குழுவின் நிதி ஒதுக்கீடு ரூ.126.00 கோடி ஆகும்.

### 2.1. குறிக்கோள்கள்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ன் அடிப்படையில் அமைந்த அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் குறிக்கோள்கள்

- ❖ அனைத்து பள்ளி வயது குழந்தைகளையும் பள்ளிகள் மற்றும் மாற்றுப் பள்ளியில் சேர்த்தல்.
- ❖ அனைத்து சமுதாய, பாலின வேறுபாடுகளை தொடக்கக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி நிலையில் முற்றிலுமாக களைதல்.
- ❖ பள்ளியில் சேர்ந்த அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் தக்கவைத்தல்.
- ❖ வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை உறுதி செய்தல்.
- ❖ முழுமையான அறிவுத்திறன் வளர்ச்சியடைதல்.
- ❖ அரசியல் அமைப்புச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்ட பண்புகளை குழந்தைகளிடையே விதைத்தல்.

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்துடன் (2009) தேசிய கலைத் திட்டம், 2005, கல்வித் துறையில் மேம்பாடு அடைய வழிகாட்டுகிறது. பள்ளி அடிப்படை கட்டமைப்பு வசதிகள், இலவச மற்றும் தரமான கல்வி வழங்குதல், உள்ளடங்கிய கல்வி போன்றவற்றிற்கு தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

## 2.2 பள்ளிகளின் அடிப்படை வசதிகள்

இந்த அரசானது பள்ளிக்குத் தேவைப்படும் கீழ்க்காணும் அடிப்படை வசதிகளை செய்ய முற்பட்டிருக்கிறது.

- ❖ கழிவறை வசதிகள் அமைத்தல்
- ❖ சுகாதாரமான குடிநீர் வழங்குதல்
- ❖ கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல்
- ❖ பள்ளிகளில் சுற்றுச் சுவர் அமைத்தல்



- ❖ இருக்கை வசதிகள் அமைத்தல்
- ❖ தலைமை ஆசிரியர் அறை, சமையற்கூடங்கள், உண்டு உறைவிட பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல் மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் போன்ற இதர வசதிகள் அளித்தல்

## 2.3 பள்ளிகளுக்கு வழங்கப்படும் மான்யம்

பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், பாதுகாத்திடவும் மற்றும் பள்ளியில் உள்ள கருவிகளை சீர்செய்திடவும் பள்ளிகளுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் மான்யங்கள் வழங்கப்படுகிறது.

*பராமரிப்பு மான்யம்*

பள்ளிகளின் கழிவறைகளைச் சரிபார்த்தல், குடிநீர்வசதி இணைப்பில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிபார்த்தல், தரைதளம் சரிபார்த்தல், கட்டடப் பூச்சு, கதவுகள், ஜன்னல்கள் பழுது பார்த்தல் மற்றும் புதியதாக மின் இணைப்பு பெறுதல் போன்றவற்றிற்கு பள்ளிப் பராமரிப்பு மான்யம் பயன்படுத்தப்படுகிறது. இதற்கென இவ்வாண்டிற்கு ரூ. 2671.85 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ரூ 7500/– வீதம் 35,783 பள்ளிகளுக்கு பள்ளி பராமரிப்பு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

*பள்ளி மான்யம்*

பள்ளி மான்யம் மூலம் பள்ளிகளுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், அலமாரிகள், அறிவிப்புப் பலகைகள்,

கற்றல் அட்டைகள் வைக்கப் பயன்படும் பெட்டிகள், தானே கற்றல் கணிதக் கருவிகள், மாணவர்கள் உட்காருவதற்கு தேவைப்படும் பாய்கள் மற்றும் பள்ளியில் உள்ள பழுதுள்ள கணினிகளைச் சீர்செய்தல் போன்ற பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த பயன்படுத்தலாம். இதற்காக 2011 – 12 ஆம் ஆண்டிற்காக ரூ.3036.380 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ரூ.5000/– வீதம் 35,783 தொடக்கப் பள்ளிகளுக்கும், ரூ.7000/– வீதம் 12,906 நடுநிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் உயர் / மேனிலைப் பள்ளிகளுக்கும் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.4. புதிய பள்ளிகள்

அனைத்து பள்ளி வயது குழந்தைகளும் எளிதாக பள்ளிக்கு செல்லும் வகையில் அவர்களது குடியிருப்புகளுக்கு அருகில் அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் புதிய தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்படுகிறது மற்றும் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படுகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் 1843 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், 5,318 தகுதியான தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### 2.5. ஆசிரியர் பணியிடங்கள்

தரமான கல்விக்கு போதுமான அளவில் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அடிப்படையாவர். தமிழகத்தில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் கடந்த பத்து ஆண்டுகளில் புதிதாக



தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளுக்கு 3,686 இடைநிலை ஆசிரியர்களும், நிலை உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகள் மற்றும் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் கூடுதலாக வழங்கப்பட்ட பணியிடங்களைச் சேர்த்து 22,666 பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 2.6 ஆசிரியர் மாணவர் விகிதம்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்திற்குப் பின்னர் ஆசிரியர் மாணவர் விகிதம் தொடக்க நிலையில் 1:30 ஆகவும், உயர்தொடக்க நிலையில் 1:35 ஆகவும் இருத்தல் வேண்டும். மாநில அளவிலான ஆசிரியர் மாணவர் விகிதம் 2002–2003–ல் 1:41 என்ற நிலையிலிருந்து 2010–11ல் 1:29 ஆக குறைந்துள்ளது. இதுபோன்று, நடுநிலை வகுப்புகளில் ஆசிரியர்–மாணவர் விகிதம் 2002–2003ல் 1:49 என்ற நிலையில் இருந்து 1:35 ஆக குறைந்துள்ளது.



| நிலை | ஆசிரியர் மாணவர் வீதம் – கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்திற்கு முன் | ஆசிரியர் மாணவர் வீதம் – கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்திற்கு பின் |
|---|---|---|
| தொடக்க நிலை | 1:40 | **1:30** |
| நடுநிலை | 1:40 | **1:35** |

### 2.7 ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி

தரமான கல்விக்குத் தரமான அர்ப்பணிப்புடன் செயல்படும் ஆசிரியர்களே அடிப்படையாவர். ஆசிரியர் பயிற்சி இதில் பெரும் பங்கு வகிக்கிறது. சமுதாய, பொருளாதார மற்றும் தொழில் நுட்ப துறைகளில் பெருமளவு மாற்றங்களை இது ஏற்படுத்துகிறது.

- 2,00,317 ஆசிரியர்களுக்கு 20 நாட்கள் பணியிடைப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.
- ஆசிரியக் கல்வி தேசியக் கலைத்திட்டம் 2005–ற்கு உட்பட்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–கேற்ற முறையில் அமையும்.
- ஆசிரியர் பயிற்சி / கல்வி அளிக்கும் எல்லாத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதால் அதிக அளவில் பள்ளிகள் பயன்பெறுகின்றன.

### 2.8. பெண் கல்விக்கான சிறப்புத் திட்டங்கள்

சமூக மற்றும் ஆண் பெண் இனவேறுபாடுகளால் மாணவிகளின் கற்றல் அடைவுகளில் ஏற்படும் இடைவெளியைக் களையவும், மாணவிகளை பள்ளியில் சேர்த்து இடைநிறுத்தமின்றி தக்கவைப்பதற்கும், பெண் குழந்தைகள் சமுதாயத்தில்



தன்னம்பிக்கையோடு செயல்படவும் கீழ்கண்ட சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்,
- தொடக்கக் கல்வி நிலையில் தேசியப் பெண்கல்வி சிறப்புத் திட்டம்,
- பெண்கல்விக்கான சிறப்புத் திட்டம்

*கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம் (KGBV)*

கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டத்தின் கீழ், பெண்கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக சமூக கட்டமைப்பு, குடும்பச் சூழல் போன்ற தடைகளினால் கல்வி பெறும் வாய்ப்பினை இழந்த பெண் குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு இடைநிலைக் கல்வி அளிப்பதே இப்பள்ளிகளின் நோக்கமாகும்.

இப்பள்ளிகளில் மாணவிகளுக்கு தரமான இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி இப்பள்ளிகள் 2004–2005ம் ஆண்டில் கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் தொடங்கப்பட்டன.

- தற்போது இத்திட்டத்தின் கீழ் 13 மாவட்டங்களில் 45 கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் 61 உண்டுஉறைவிடப் பள்ளிகள் செயல்பட்டுவருகின்றன. (இவற்றில் 30 பள்ளிகள் 100 மாணவிகள் தங்கி கல்விபயிலும் உண்டு உறைவிடப் பள்ளிகளாகவும், 31 பள்ளிகள் 50 மாணவிகள் தங்கி கல்விபயிலும் உண்டுஉறைவிடப் பள்ளிகளாகவும் இயங்கி வருகின்றன).

❖ இப்பள்ளிகளை 36 அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

❖ இப்பள்ளிகளில் பள்ளி செல்லாத மற்றும் இடைநின்ற 4085 மாணவிகள் கல்வி பயிலுகின்றனர்.

❖ இதுவரை இப்பள்ளிகளில் பயின்று 8 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற 1519 மாணவிகள் உயர்நிலைக் கல்வியைத் தொடர உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

*தேசியப் பெண் கல்வி சிறப்புத் திட்டம் (NPEGEL)*

தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் மாணவிகளின் சேர்க்கையை அதிகப்படுத்தவும், சேர்க்கப்பட்ட மாணவிகளை தக்கவைக்கவும், பல்வேறு சூழல்களை எதிர்கொள்ளக்கூடிய திறன்களை வளர்க்கவும் தேசியப் பெண் கல்வி சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ 11 மாவட்டங்களில் 37 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் 937 மாதிரித் தொகுப்புப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. (மாதிரித் தொகுப்புப் பள்ளிகள் என்பது குறுவளமைய அளவில் பெண் குழந்தைகள் நட்பு பள்ளிகள் இணைக்கப்பட்ட ஒரு தொகுப்பாகும்).

❖ இத்திட்டத்தின் மூலம் 937 மாதிரித் தொகுப்புப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளில் பயிலும் 1,87,230 பெண்குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

❖ 710 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்கு பெண் குழந்தைகளுக்கு உகந்த செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒரு வகுப்பறைக் கட்டடம் வழங்கப்பட்டுள்ளது.



*பெண் கல்விக்கான சிறப்புத் திட்டம்*

பெண் குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்குவதோடு வாழ்வியல் திறன் மற்றும் தொழிற்பயிற்சி வழங்கி அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தி திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் புதிய திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நடுநிலை வகுப்புகளில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு கீழ்க்காணும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

❖ 75,600 பெண் குழந்தைகளுக்கு தொழிற் கல்வி திறன்கள் பயிற்சி வழங்கப்படுகிறது – இதற்கென ரூ.216.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 3000 பெண் குழந்தைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், அருங்காட்சியகம், கோளரங்கம் போன்ற இடங்களை பார்வையிட ரூ. 54.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 42,000 மாணவிகளுக்கு ரூ.105.00 இலட்சம் செலவில் உடல் நல விழிப்புணர்வுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**2.9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குழந்தைகளுக்கான கல்வி**

இக்கல்வியாண்டில் (2011–2012) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குழந்தைகளுக்கு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்திட ரூ.375.00 இலட்சமும், சிறுபான்மையினக் குழந்தைகளுக்கு ரூ.150.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ கல்விச் சுற்றுலா – நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 3000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் பயன்பெறுவர். இதற்கென ரூ 54.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ உடல்நல விழிப்புணர்வுத் திட்டம் – நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 41,400 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பயன்பெறுவர். இதற்கென ரூ.103.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ வாழ்வியல் திறன்கள் பயிற்சி / தொழிற் கல்விப் பயிற்சி.
- ❖ கற்றல் உபகரணங்கள் / தானே கற்றல் கணித உபகரணப் பெட்டிகள் மாணவர்களுக்கு வழங்குதல் – இதற்கென ரூ 217.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.10. சிறுபான்மையின குழந்தைகளுக்கான கல்வி

- ❖ கல்விச் சுற்றுலா – நடுநிலைப் பள்ளிகளில் பள்ளிகளில் பயிலும் 3000 சிறுபான்மையின குழந்தைகள் பயன்பெறுவர். இதற்கென ரூ 54.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ கற்றல் உபகரணங்கள் / தானே கற்றல் கணித உபகரணப் பெட்டிகள் மாணவர்களுக்கு வழங்குதல் – இதற்கென ரூ 96.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11. பள்ளி செல்லாக் குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல்

பள்ளி செல்லாக் குழந்தைகளை கண்டறிவது மற்றும் பள்ளிகளில் சேர்ப்பது என்பது மாநில அரசுக்கு ஒரு சவாலான பணியாகும். இருந்த போதிலும் மாநில அரசின் தொடர்ச்சியான முயற்சியின் காரணமாக கடந்த ஒன்பது ஆண்டுகளில் பள்ளி



செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது.

2011–2012 ஆம் ஆண்டில் 61,653 பள்ளி செல்லாக் குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து மீண்டும் பள்ளியில் சேர்த்து முறையான கல்வி அளித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.5034.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி செல்லாக் குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்காக பல்வேறு சிறப்பு பயிற்சி அளித்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*சிறப்பு பயிற்சித் திட்டங்கள்*

- ❖ கோடைக்கால முகாம்கள்
- ❖ சிறப்பு இணைப்பு பயிற்சி மையங்கள்
- ❖ உண்டு உறைவிட சிறப்புப் பயிற்சி மையங்கள்
- ❖ நேரடி சேர்க்கை
- ❖ தன்னார்வலர்களுக்கு பயிற்சி
- ❖ புலம் பெயர்ந்த குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல்.
- ❖ உண்டு உறைவிடப் பள்ளிகள்

*உண்டு உறைவிடப் பள்ளிகள்*

அனைவருக்கும் பள்ளி வசதி அளிக்கும் பொருட்டு இடைநின்ற குழந்தைகள், பெற்றோர் ஆதரவற்ற குழந்தைகளுக்கு (தெருவோரக் குழந்தைகள், வீடில்லா குழந்தைகள்) மூன்று உண்டு உறைவிடப் பள்ளிகள் நடப்பாண்டில் துவங்க திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக ரூ.84.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.12. கல்வித் தர மேம்பாட்டுச் செயல்பாடுகள்

கல்வித் தர மேம்பாட்டிற்காக பல புதிய அணுகுமுறைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக வகுப்பறைகள் குழந்தைகளை மையப்படுத்தியதாகவும், மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், மகிழ்வுடன் கற்கும் முறையிலும் உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி தொடக்கநிலையில் (ஒன்று முதல் நான்கு வகுப்புகள்) செயல்வழிக் கற்றல் முறையும், நடுநிலை வகுப்புகளில் (ஐந்து முதல் எட்டு வகுப்புகள்) படைப்பாற்றல் கல்வி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ 2003 – 2004 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரை செயல்வழிக் கற்றல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இக்கல்வி முறை தமிழ்நாட்டில் அனைத்து 37,486 தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- ❖ 5ம் வகுப்பு மாணவர்களுக்கு, எளிய படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளுக்கு படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. படைப்பாற்றல் கல்வி முறையில், மாணவர்கள் தானாக கற்கவும், குழுவுடன் இணைந்து கற்கவும், மனவரைபடம் மூலமாகவும், சக மாணவர்களுடன் கருத்துக்களை விவாதம் செய்து கற்கவும், ஆசிரியர்கள் போல கருத்துக்களை எடுத்துரைப்பதன் மூலம் கற்கவும், பல்வேறு வாய்ப்புகள் வகுப்பறையில் வழங்கப்படுகின்றன. இம்முறையில் ஆசிரியர் ஒரு ஏதுவாளராக (Facilitator) செயல்படுகிறார்.



- ❖ மாணவர்கள் தானே படித்து, புரிந்துகொண்ட கருத்துக்களை, மனவரைப்படமாக வெளிப்படுத்துவதன் மூலம், படைப்பாற்றலும், தன்னம்பிக்கையும் பெறுகின்றனர்.

## 2.13. மழலையர் முன்பருவக் கல்வி (ECCE)

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் கற்றல் உபகரணங்கள் 5100 பள்ளிகளுக்கு வழங்கவும், அங்கன்வாடி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல் போன்ற செயல்பாடுகளுக்கு இக்கல்வியாண்டில் ரூ.600.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.14. கணினி வழிக் கற்றல்

வகுப்பறைக் கற்றலில் கணினிகளை பயன்படுத்துதல் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழக குழந்தைகளுக்கு உலகத்தைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கணினி மற்றும் கணினி சார்ந்த பொருட்களை பள்ளிகளுக்கு வழங்குதல், கணினிப் பயிற்சி மற்றும் மின்னணு கற்றல் பொருட்கள் வழங்குதல் ஆகியவை இக்கூறின் முக்கிய செயல்பாடுகளாகும்

- ❖ மாநிலத்திற்கு ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (மாவட்டங்களுக்கான ஒதுக்கீடு தலா ரூ. 50 இலட்சமாகும்).
- ❖ 2011 – 12 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் கணினி கொள்முதலுக்கு ரூ.1,269 இலட்சம், பயிற்சி மற்றும் கற்றல் மென்பொருட்கள் வழங்குவதற்கு ரூ.231 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 2011–12ம் ஆண்டில் 1410 நடுநிலைப் பள்ளிகளுக்கு 4230 கணினிகள் வழங்குதல்.

❖ கணினி வழிக் கல்வியின் மூலம் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் பணிகளை மேம்படுத்திட ஆசிரியர்களுக்கு கணினி வழிப் பயிற்சி அளிப்பதில் தனி கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

❖ 2011–12 ஆம் ஆண்டில் 33,000 ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்குதல்.

**2.15. உள்ளடங்கிய கல்வி**

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் அனைவருக்கும், குறிப்பாக கற்றலில் குறைபாடு மற்றும் தற்புணை ஆழ்வு (autism) குழந்தைகளுக்கும், அவர்களின் இயலாத்தன்மையின் வகை மற்றும் பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வித பாகுபாடற்ற உள்ளடங்கிய கல்வி வழங்குவதையே அனைவருக்கும் கல்வித் திட்டம் தனது அடிப்படை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நடப்பு கல்வியாண்டிற்கு 1,36,782 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள், உள்ளடங்கிய கல்விச் செயல்பாடுகளின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளனர். இக்குழந்தைகளுக்கு கீழ்கண்டுள்ள முக்கிய உள்ளடங்கிய கல்விச் செயல்பாடுகளை, முறையான செயல்பாடுகளுடன் இணைத்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளன.

❖ கற்றலில் குறைபாடு, மனவளர்ச்சி குறைபாடு ஆகிய குறைபாடுகளை உடைய குழந்தைகளுக்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.



❖ 463 புதிய சிறப்பாசிரியர்கள், 33 வாழ்வியல் திறன் பயிற்சி வல்லுநர்கள் (Occupational therapist) / பேச்சுப் பயிற்சி வல்லுநர்கள் (Speech therapist) ஈடுபடுத்தப்படுவர்.

❖ மிகவும் பாதிப்படைந்துள்ள குழந்தைகளை உள்ளடங்கிய கல்விச் செயல்பாடுகளில் இணைத்திட 719 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

❖ சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தலா ரூ. 8 இலட்சம் மதிப்பில் “மாதிரி ஆதார வளமையங்கள்” அமைக்கப்படும்.

❖ 1500 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு போக்குவரத்துப் பயணப்படி வழங்கப்படும். இதற்காக ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 1663 பள்ளிகளுக்குத் தலா ரூ.500 சிறப்பு கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் தயாரிப்பதற்காக வழங்கப்படும்.

❖ 1473 பள்ளிகளுக்குத் தலா ரூ.5000/– மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட வழங்கப்படும்.

❖ ஆசிரியர்கள், ஆசிரியப் பயிற்றுநர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் கல்வி சார்ந்த சிறப்புப் பயிற்சியானது இந்திரா காந்தி திறந்த நிலை பல்கலைக் கழகம் வாயிலாக அளிக்கப்படும்.

❖ கற்றலில் குறைபாடு மற்றும் மனவளர்ச்சி குறைபாடுடைய குழந்தைகளைக் கண்டறிந்து அக்குழந்தைகளுக்குத் தேவையான பயிற்சி வழங்குதல், குறைதீர் கற்பித்தல் மற்றும் தனிநபர் கல்வித் திட்டம் போன்ற செயல்பாடுகள் சார்ந்து ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும்.

- ❖ அனைத்து ஆசிரியர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் தேவையான பயிற்சிகள் வழங்கப்படும்.
- ❖ பெற்றோர் மற்றும் சமுதாயத்தினருக்கு உள்ளடங்கிய கல்வி சார்ந்து வலுவான ஊக்குவிப்பும் மற்றும் விழிப்புணர்வை உண்டாக்கிட ரூ.9.876 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் சுகாதாரத்துறை ஆகிய துறைகளின் பங்களிப்பு மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடலுடன், மேம்படுத்தப்பட்ட உள்ளடங்கிய கல்விச் செயல்பாடுகள் செயல்படுத்தப்படும்.

### 2.16. முழுமையான வளர்ச்சி மற்றும் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மதிப்புகள்

பாடப்புத்தகங்களை மட்டும் படித்திடாமல் குழந்தைகளின் படைப்பாற்றல் திறன் மற்றும் அனைத்துப் பிரிவுகளிலும் திறமையை வெளிப்படுத்துகின்ற வகையில் மாற்றங்களைக் கொண்டு வருதல். பள்ளியின் தினசரி செயல்பாடுகளில் வாழ்வியல் திறன் பயிற்சி, தொழிற்கல்வி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல். குடியுரிமைப் பயிற்சி, கலைகள் கற்பித்தல், உடற்கல்வி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மனித உரிமைகளைப் பாராட்டுதல், சமவாய்ப்பு, சமூக நீதி, அமைதி மற்றும் மகிழ்ச்சியோடு ஒருங்கிருத்தலுக்கு தேவையான புத்தாக்கப் பயிற்சி அளிப்பதும் கல்வி முறையின் ஒரு அங்கமாக இருத்தல் வேண்டும்.



### 2.17. கல்விக் குறியீடுகளின் முன்னேற்றம்

கடந்த ஒன்பது ஆண்டுகளில் அனைத்து மாவட்டங்களிலும் தொடக்க நிலை கல்வியில் அனைத்து கல்வி குறியீடுகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

எதிர்காலத்தில், இந்த விரிவான கணக்கெடுப்புகளும், 2011ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பும், இன்னும் தரமான மற்றும் இலக்கை அடையவும் சீரிய முறையில் செயல்படவும் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ல் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடையவும் வழிவகுக்கும்.

# 3. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 3.1 அறிமுகம்

தமிழக அரசின் பள்ளிக் கல்வி இயக்ககம் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற விரும்பும் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. தமிழகத்தில் 2234 அரசு உயர்நிலைப் பள்ளிகள், 543 அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள், 218 சுயநிதி உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2388 அரசு மேல்நிலைப் பள்ளிகள், 1044 அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 192 சுயநிதி மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 6619 பள்ளிகள், 60 இலட்சம் மாணவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்கின்றன. நல்ல தரமான கல்வியைக் கற்பிக்கும் வகையில் 1,30,000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 3.2. தொலை நோக்கு

தமிழக அரசின் குறிக்கோள் அனைவருக்கும் எளிதில் கல்வியைக் கிடைக்கச் செய்தல் மற்றும் இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்தி அனைத்து மாணவ, மாணவியருக்கும் தரமான கல்வியை வழங்குதல்

## 3.3. குறிக்கோள்

- ❖ தொடக்கக் கல்வியை வெற்றிகரமாக முடித்து வெளிவரும் மாணவர்களுக்கு உயர்கல்வியை வழங்குதல்.



- ❖ இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குதல்.
- ❖ மேல்நிலைக் கல்வியில் தொழில் திறன்களை அறிமுகம் செய்தல்.
- ❖ பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குதல்.
- ❖ ஆசிரியர்களின் தொழில் சார்ந்த திறமைகளை மேம்படுத்துதல்.
- ❖ மாணவர் நலத்திட்டங்களைக் கண்காணித்தல்.

## 3.4. செயல்படுத்தும் வழிமுறைகள்

*எளிதாக எட்டச் செய்தல்:—*

- ❖ நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல்.
- ❖ புதிதாகத் தொடங்கப்படும் பள்ளிகளுக்கு அனுமதி அளித்தல்.

*உள் கட்டமைப்பு வசதி:—*

- ❖ கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை வழங்கப்படுகிறது.
- ❖ அறிவியல் ஆய்வகங்கள், மொழி ஆய்வகங்கள் மற்றும் கணித ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அறிவியல் உபகரணங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

*ஆசிரியர் நியமனம்*

- ❖ ஆசிரியர் காலிப் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்படுகின்றன.

- ❖ உயர்நிலையில் காலிப் பணியிடம் ஏற்படும் பொழுது தகுதியும் பணிமூப்பும் கொண்ட ஆசிரியர்கள் பதவி உயர்வு மூலமாக நிரப்பப்படுகிறார்கள்.

*ஆசிரியர் பயிற்சி*

- ❖ பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை ஆசிரியர்களுக்கு பாடப்பொருள் மற்றும் கற்பித்தல் முறை ஆகியவற்றில் 5 நாள் பயிற்சி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் மூலம் அளிக்கப் படுகிறது.

*நலத்திட்டங்கள்*

- ❖ இலவசப் பாடநூல்கள் விநியோகம்.
- ❖ இலவச மிதி வண்டி வழங்குதல்.
- ❖ இலவச மதிய உணவுத் திட்டம்.
- ❖ இலவச சீருடைகள்
- ❖ இலவச காலணிகள்
- ❖ இலவச பேருந்து பயணச்சீட்டு
- ❖ இலவச மடிக்கணினி
- ❖ இடைநிற்றலை குறைப்பதற்கு சிறப்பு ஊக்கத் தொகை.

**3.5. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சிறப்புக் கட்டணம் ரத்து**

தமிழ் நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வசூலிக்கப்பட்டு வந்த சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.20.50 கோடி ஒதுக்கியுள்ளது.



**3.6. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்**

10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், தமிழ் வழி பயிலும் மாணவர்கள் பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளளது.

**3.7. பெண்களுக்கான ஊக்குவிப்புத் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவிகள் பள்ளியிலிருந்து இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு 9ம் வகுப்பில் பயிலும் 16 வயதிற்குட்பட்ட திருமணமாகாத மாணவியர் ஒவ்வொருவருக்கும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.3000/– வைப்பீடு செய்யப்படும்.

**3.8. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் 2009**

தனியார் பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் (Special fees. Tuition fees, Term fees etc) வசூல் செய்வதை முறைப்படுத்துவதற்காகத் தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக அரசு தனியார் பள்ளிகள் கட்டணம் வசூலிப்பதை நிர்ணயம் செய்வதற்காக ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில் மாவட்ட அளவிலான

குழு ஒன்று தவறு செய்யும் பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.எஸ்.ஆர்.சிங்காரவேலு அவர்கள் தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழுவின் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

**3.9. இலவசப் பாடநூல் வழங்குதல்**

தமிழக அரசால் தரமான பாடப்புத்தங்கள் தயாரிக்கப்பட்டு, அவை அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், பகுதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 12ம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 66,69,086 மாணவ மாணவியர்கள் பயன் அடைகின்றனர்.

**3.10. இலவச மிதிவண்டி வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் இலவச மிதிவண்டி அரசு/அரசு உதவி பெறும்/ பகுதி நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 5,99,333 மாணவ மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர். இதற்காக ரூ.148.36 கோடி நிதி செலவிடப்படுகிறது.

**3.11. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்.**

இத்திட்டத்தின் மூலம் பள்ளிச் சிறார்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான



செலவினங்கள் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 12,16,003 மாணவர்கள் பயனடைகின்றனர்.

**3.12. இலவசச் சீருடை வழங்கும் திட்டம்**

1985–86 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8 ஆம் வகுப்புகளில் மதிய உணவு உண்ணும் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 12,16,003 மாணவர்கள் இதன் மூலம் பயனடைகின்றனர்.

**3.13. இலவசப் பேருந்து பயணச் சீட்டு**

அரசு பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சீட்டுகள் வழங்கும் திட்டத்திற்கு அரசால் ரூ.300.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,33,652 மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

**3.14. மேல்நிலைப் பள்ளிகளில் கணினி வசதியளித்தல்**

கணினிக் கல்வித் திட்டம் இன்றைய நவீன உலகின் சவால்களை மாணவர்கள் எதிர் கொள்ளும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கணினிக் கல்வித் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்தும் நோக்கத்தோடு இதுவரை 1980 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் 2131 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினி மற்றும் உபகரணங்கள்

வழங்கப்பட்டுள்ளன. கணினி உதவியுடன் கற்றல் திட்டத்தின் கீழ் 6 முதல் 10ம் வகுப்பு முடியவுள்ள மாணவர்களுக்கு கணினி அறிவியல் கலைத் திட்டம் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் 6ம் வகுப்பு மாணவர்களுக்கு பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டு பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. கணினிக் கல்விப் பயிற்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், 6 முதல் 10ம் வகுப்பு வரை கையாளும் ஆசிரியர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. மற்ற வகுப்புகளுக்கும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டு விரிவு படுத்தப்படும்.

### 3.15. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி

தமிழக அரசு கணினிக் கல்வியினைப் பள்ளிகளில் மேம்படுத்தவும், மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் திறன்களை வளர்த்திடவும் உறுதி பூண்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை முன்னேற்றமடையச் செய்யும் பொருட்டு தேவையான கல்வித் தகுதியுடன் கூடிய 1685 கணினி பயிற்றுநர்கள் இதுவரை நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வேளாண்மை கல்வி பயிலும் மாணவர்களுக்குக் காலத்தின் தேவைக்கேற்ப புதிய மற்றும் புதுமையான வேளாண்மை முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 200 வேளாண்மை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



தொழிற் கல்விக்கான உயர்மட்டக் குழு அறிக்கையின் அடிப்படையில் மேல்நிலைப்பள்ளிகளில், தொழிற்கல்வியினை நடைமுறைப்படுத்துவது சார்ந்து தற்போதைய தேவைக்கேற்ப தொழிற்கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது 9 முக்கிய பிரிவுகளில் மட்டுமே தொழிற்கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

### 3.16.முதல் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை

திறமை மிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பை தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து மேல்நிலைப் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குரிய பரிசுத் தொகை பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

1. முதலிடம் – ரூ.50,000/–
2. இரண்டாமிடம் – ரூ.30,000/–
3. மூன்றாமிடம் – ரூ.20,000/–

மேலும், மாவட்ட அளவில் மேல்நிலைத் தேர்வில் முதலிடம் பெறும் மூன்று மாணவர்களுக்கு உயர்கல்விக்கான செலவை அரசே ஏற்கிறது. அதற்கான விவரம் பின்வருமாறு.

1. அரசு மேல்நிலைப்பள்ளி – 1
2. நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி – 1
3. ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேஷன் மற்றும் சுயநிதி மேல்நிலைப்பள்ளி – 1

அதே போன்று மாநில அளவில் தமிழை முதல்மொழிப் பாடமாக படித்து பத்தாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பின்வருமாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

1. முதலிடம் – ரூ. 25,000/–
2. இரண்டாமிடம் – ரூ. 20,000/–
3. மூன்றாமிடம் – ரூ. 15,000/–

இது தவிர, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கிறது.

மேலும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை முதல் மொழிப்பாடமாகப் படித்து மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று மாணவர்களுக்கு உயர்கல்விக்கான செலவினமாக ரூ.1500/– வழங்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு.

1. அரசு உயர்நிலைப் பள்ளி – 1
2. நிதி உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி – 1
3. ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேஷன் மற்றும் சுயநிதி உயர்நிலைப்பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து – 1

தவிர பாடவாரியாக இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வில் மாநிலத்தில் முதலிடம் பெறும் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.



**3.17 இடை நிற்றலைத் தவிர்ப்பதற்கான சிறப்பு ஊக்கத் திட்டம்**

தமிழக அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் இடை நிற்றலைத் தவிர்ப்பதற்காக ஊக்கத் தொகை வழங்கத் தீர்மானித்துள்ளது. 10 மற்றும் 11ம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1500ம், 12ம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2000ம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை தமிழ்நாடு மின்விசை நிதிக் கழகத்தில் (Tamil Nadu Power Finance Corporation) மாணவர்கள் பெயரில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு மாணவர்கள் கல்வியை வெற்றிகரமாக முடிக்கும்போது ரூ.5000/– ரொக்கமாக வழங்கப்படும். இதன் மூலம் ஆண்டு தோறும் 24,94,649 மாணவ மாணவியர் பயனடைவர் என எதிர்பாக்கப்படுகிறது. இதற்கு ரூ.394.04 கோடி செலவாகும்.

**3.18. சாதி/இருப்பிட/வருவாய் சான்றிதழ் வழங்கல்**

பள்ளியில் பயிலும் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு சாதி, இருப்பிட, வருவாய் சான்றிதழ்கள் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களால் வருவாய் துறையினரிடமிருந்து பெற்று வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இம்மாணவர்கள் பள்ளியில் 10 மற்றும் 12ம் வகுப்புகள் முடித்துச் செல்லும் போது இச்சான்றுகள் வழங்கப்படுகின்றன.

**3.19. வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதியுதவி**

- விபத்தில் இறந்த அல்லது நிரந்தர முடக்கமடைந்த வருவாய் ஈட்டும் தாய்/தந்தையரை இழந்த மாணவர்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- ❖ மாணவ மாணவியர்களின் கல்வி நலன் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்னும் உயரிய எண்ணத்தில் தமிழக அரசு உறுதியாக உள்ளது.
- ❖ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக ரூ.50,000/– தமிழ்நாடு மின்விசை நிதிக் கழகத்தில் (Tamilnadu Power Finance Corporation) மாணவர்களின் பெயரில் வைப்பு நிதியாக வைக்கப்படும். இதன் மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு செலவு செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் ரூ.5.75 கோடி செலவில் 1150 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**3.20. அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்**

கிராமப் பகுதிகளில் 10ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை எண்ணி அரசு கவலை கொள்கிறது. அத்தகைய மாணவர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இவ்வாண்டு 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் போது, உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடமாகத் தரம் உயர்த்தப்படுகிறது. இவ்வாண்டு முதல் கிராமப்புற மாணவர்களுக்கு உதவும் வண்ணம் புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் அறிவியல் மற்றும் கலைப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2011–2012 கல்வியாண்டு முதல் தரம் உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் முன்னர்



அனுமதிக்கப்பட்டுவந்த 5 முதுகலை ஆசிரியர் பணியிடங்களை 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த தரம் உயர்த்தப்பட்ட 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், பொருளியல், வரலாறு மற்றும் வணிகவியல் ஆகிய 9 பாடங்களுக்கு முதுகலை ஆசிரியர் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**3.21. பள்ளிகளில் நிதி சார்ந்த கல்வியறிவுத் திட்டம்**

பள்ளிகளில் நிதி சார்ந்த கல்வியறிவுத் திட்டம் 8 மற்றும் 11ஆம் வகுப்புகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதன் முறையாக 16 மாவட்டங்களிலுள்ள 182 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் செயல்படுத்தப் படுகிறது.

நிதிசார்ந்த கல்வியறிவுத் திட்டத்தின்கீழ் பாடத்திட்டம் தேசிய பங்குச் சந்தை நிறுவனத்தின் மூலம் (National Stock Exchange) வடிவமைக்கப்பட்டு, பள்ளிக்கல்வி இயக்ககம் மூலம் ஏற்பளிக்கப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் பாடப்புத்தகங்கள் அச்சிட்டு 182 பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் Online தேர்வுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த முதன்மைக்கல்வி அலுவலர்கள் மூலம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 9 மற்றும் 12ம் வகுப்புகளில் இத்திட்டத்தைத் தொடர அரசு திட்டமிட்டுள்ளது.

### 3.22. யோகா பயிற்சி

உடற்கல்விக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு பாட வேளைகளில் ஒரு பாட வேளையை முழுமையாக யோகா பயிற்சிக்கென ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. யோகா பயிற்சி பெற்ற உடற்கல்வி ஆசிரியர்களைக் கொண்டு உடற்கல்விப் பாடத்துடன் யோகா பயிற்சியும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

### 3.23. சுற்றுச் சூழல் மன்றம்

- ❖ சுற்றுச் சூழல் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்துவது இம்மன்றத்தின் நோக்கமாகும்.
- ❖ சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை மூலம் தமிழகத்தில் உள்ள ஒரு பள்ளிக்கு ரூ.1250 வீதம் 1200 பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது.
- ❖ மைய அரசால் தொடங்கப்பட்ட தேசிய பசுமைப் படைத் திட்டத்தில் 30 மாவட்டத்திலுள்ள 7500 பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2500/– வீதம் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை மூலம் வழங்கப்படுகிறது.
- ❖ இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த மாவட்ட அளவில் ஒரு ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாநில அளவில் ஒரு உதவி இயக்குநர் (சுற்றுச்சூழல்) பணியிடமும் ஏற்படுத்தப்பட்டு முறையே முதுகலை பட்டதாரி ஆசிரியர் (தாவரவியல், உயிரியல்) மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் நிலையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



- ❖ சுற்று சூழல் மற்றும் தேசிய பசுமைப் படை மன்றங்கள் மரம் நடுதல் மற்றும் தோட்டம் அமைக்கும் பணியைச் செய்து வருகின்றன.

### 3.24. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம்

- ❖ விவசாயத் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களிலிருந்து பள்ளியில் பயிலும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.
- ❖ இத்திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களில் 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 3.25. நபார்டு வங்கி உதவித்திட்டம்

நபார்டு வங்கி உதவியுடன் கல்வித் தரத்தை உயர்த்துகின்ற வகையில் அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளுக்குப் போதிய கட்டட வசதி அமைத்து தரப்படுகிறது. பகுதி–1 முதல் பகுதி –5ல் 1154 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 414.87 கோடி செலவில் வகுப்பறைகள், கழிவறைகள், ஆய்வகங்கள் மற்றும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. பகுதி-6 மற்றும் பகுதி-7ல் ரூ.293 கோடியும் பகுதி–8 மற்றும் பகுதி–9ல் ரூ. 474.10 கோடியும் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

பகுதி 10–Aன் கீழ் 303 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.235.14 கோடி கட்டட வசதிக்காக ஒதுக்கப் பட்டுள்ளது. 16 பள்ளிகளில் இப்பணி நிறைவடைந்துள்ளது. 287 பள்ளிகளில் இப்பணி நிறைவடைகின்ற நிலையில் உள்ளது.

நபார்டு வங்கியின் மூலமாக பகுதி 10–Bன் கீழ் 230.29 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 259 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் பயனடைய உள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றும் பணியை பொதுப்பணித்துறை மேற்கொள்கிறது.

### 3.26. தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வுத் திட்டம்

ஊரகப் பகுதியிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் திறன் மிக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் ரூ.1,08,32,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்தொகையினை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் பிரித்து வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகை பெற பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/– ஆகும். இத்தேர்வுக்கு தற்போது 9ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவ மாணவியரே தகுதியானவர்கள் என கருதப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் அரசுத் தேர்வுத் துறையினரால் இத்தேர்வுகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50 மாணவர்கள், 50 மாணவிகள் என மொத்தம் 100 பேர் இத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



தேர்ந்தெடுக் கப்பட்ட மாணவ/மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆண்டிற்கு ரூ.1000/–ம் வீதம் 4 ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 3.27. நாட்டு நலப்பணித் திட்டம் (National Service Scheme)

பள்ளிக் கல்வித்துறையில் தற்போது, மேல்நிலைப் பள்ளிகளில் 1940 அலகுகளில் 97,000 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், மாணவர்கள் பள்ளியில் படிக்கும் நிலையிலேயே அவர்களுக்கு ஆளுமைத் திறனையும், நாட்டுப் பற்றையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளவும் மற்றும் சமுதாய சேவையாக மருத்துவ முகாம்களை நடத்துதல், இரத்ததான முகாம்களில் உதவிபுரிதல், விழிப்புணர்வு முகாம் நடத்துதல் மற்றும் நலத் திட்டங்களைப் பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைத்தல். தொடர் பணி மான்யமாக ரூ.11,000/– மற்றும் சிறப்பு முகாம் மான்யமாக ரூ.11,250/– வீதம் வழங்கப்படுகிறது.

### 3.28. சாரண சாரணிய இயக்கம்

- ❖ சாரண சாரணிய இயக்கம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் செயல்பட்டு வருகிறது.
- ❖ சாரண சாரணியர் இயக்கத்தின் மூலம் கோவில் வளாகத்தை சுத்தப்படுத்துதல், மரம் வளர்த்தல், போக்குவரத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் முதலுதவி

செய்தல் ஆகிய சமூக சேவைகளில் மாணவர்கள் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்ள இவ்வியக்கம் உதவி செய்கிறது.

- இவ்வியக்கத்திற்கு தமிழக அரசின் மானியத் தொகையாக ரூ.7.00 இலட்சம் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இத்தொகையைக் கொண்டு இவ்வியக்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் மற்றும் அரசு வழங்கும் சலுகைகள் அனைத்தும் வழங்கப்படுகிறது.

- 1998–1999–ம் ஆண்டு முதல் தலைசிறந்த சாரண சாரணியருக்கு **இராஜ்யபுரஸ்கார்** விருது மேதகு ஆளுநரால் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5.00 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

### 3.29. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

தமிழ்நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் அனைத்து பள்ளிகளிலும் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியரே இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஆவார். இவ்வியக்கத்தில் மாணவர்கள் தொண்டர்களாகவும், ஆசிரியர் பயிற்றுநர்களாகவும் உள்ளனர். மாணவர்கள் தங்களுக்குள் உள்ள பல்வேறு திறமைகளை மேம்படுத்துவதற்காகவும், மனிதநேய கொள்கைகளை வளர்த்திடவும் இச்சங்கம் உதவுகிறது.

### 3.30. மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்டங்களும் அவர்கள் நலம் பேணுதலும் (IEDSS)

மாற்றுத் திறனாளிகளுக்கான இடைநிலைக் கல்வியில் உள்ளடங்கிய கல்வித் திட்டம் மாற்றுத்திறன் கொண்ட



குழந்தைகளுக்கு மைய அரசின் 100 சதவீத நிதி உதவியுடன் தமிழக அரசின் மூலமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.372.44 இலட்சத்தில் ரூ186.22 இலட்சம் முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 3.31. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

ஆண்டுதோறும் மாநிலத்தில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது 1960 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது 1997 முதல் முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5ஆம் தேதி வழங்கப்பட்டு வருகிறது.

### 3.32. ஆசிரியர்களுக்கான தேசிய விருது

மைய அரசின் மூலம் நாடு முழுவதும் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தேசிய விருது வழங்கப்பட்டு வருகிறது. ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 22 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் புதுதில்லியில் செப்டம்பர் 5ஆம் நாள் விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறும் ஆசிரியர்களுக்கு ரூ.25,000/– ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. மேலும் இவர்கள் விருது பெறச் செல்லும் பயணச் செலவும் வழங்கப்படுகிறது.

### 3.33. ஊக்குவிப்பு விருது

10 முதல் 15 வயது வரை உள்ள பள்ளி மாணவர்கள் மத்தியில் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டத் திட்டம் இது. இதனால் மாணவர்களின் அறிவியல் திறன் வளர்வதோடு அல்லாமல் நாட்டின் அறிவியல் தொழில் நுட்பம் மேம்படுத்துவதாகவும் அமைகிறது. பல்வேறு நிலைகளில் நடத்தப்படுகின்ற மாணவர்களின் அறிவியல் கண்காட்சியில் தேர்வு செய்யப்படுகின்ற மாதிரிகளுக்கு ரூ.5,000/– வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 20 மாணவர்கள் (14 மாணவர்கள் 6 மாணவிகள்) தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தில்லியில் தேசிய அளவில் நடத்தப்படவுள்ள அறிவியல் கண்காட்சியில் இவர்கள் பங்கு பெறவுள்ளனர்.

### 3.34. விருது பெற்ற ஆசிரியர்களுக்கு விடுமுறையுடன் கூடிய பயணச் சலுகை

இந்திய அரசின் சார்பாக மாநில, தேசிய விருது பெற்ற ஆசிரியர்களுக்கு குடும்பத்துடன் அவர்கள் இந்தியாவின் எப்பகுதியையும் கண்டுகளிக்க ஐந்தாண்டுக்கு ஒரு முறை 14 நாட்களுக்கு தொடர் வண்டியில் 3 அடுக்கு படுக்கை வசதிக் கொண்ட குளிர்ச்சாதன பெட்டியில் பயணம் செய்ய உதவித் தொகை வழங்கப் படுகிறது. நாள் ஒன்றுக்கு தினப்படியாக ரூ.200/–ம் வழங்கப்படுகிறது.



### 3.35. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962ல் நிறுவப்பபட்டது. இந்நிறுவனம் மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களை அலுவல் வழித் தலைவராகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை அலுவல் வழிச் செயலாளராகவும் கொண்டு பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. ஆசிரியர் தினக்கொடி விற்பனை நிதியை பயன்படுத்தி, பல்வேறு ஆசிரியர் நலத் திட்டங்கள் இதன் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

### 3.36 ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவி

இத்திட்டத்தின் கீழ் ஆசிரியரோ அல்லது அவரது குடும்பத்தைச் சார்ந்தோரோ உடல் நலிவுற்று மருத்துவ மனையில் சேர்ந்து உடல் நலம் பேணும் செலவிற்கு ரூ.50,000/– அல்லது மருத்துவச் செலவில் 75% ஆகியவற்றில் எது குறைவோ அந்தத் தொகை வழங்கப்படுகிறது.

### 3.37. கல்வி உதவித் தொகை

ஆசிரியரின் குழந்தைகள் மருத்துவம் / தொழிற்க் கல்வி பயின்றால் அக்குழந்தைகளுக்கு கல்வி உதவி நிதியாக முறையே ஆண்டுக்கு ரூ.5,000/– மற்றும் ரூ.2,500/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.53.05 இலட்சம் செலவில் 1092 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.38. பெற்றோர் ஆசிரியர் கழகம்

பள்ளி வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் படிப்பைக் கைவிடாமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்து மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் வினா வங்கி ஏடுகள் மற்றும் வழிகாட்டு நூல்கள் வெளியிடப்பட்டு வருகிறது. இக்கழகம் மார்ச் / ஏப்ரல் பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி விகிதம் காட்டிய உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு பரிசுத் தொகை வழங்கி பெருமைப்படுத்துகிறது.

## 3.39. பள்ளி வளர்ச்சித் திட்டம்

அரசுப் பள்ளிகளில் உள்ள அடிப்படை வசதிகளை பொது நிறுவனங்கள் மற்றும் புரவலர்கள் பங்களிப்பின் மூலம் மேம்படுத்தி நடத்திட அரசு பள்ளிக் கல்வித் துறையை ஊக்குவிக்கிறது. இத்திட்டம் பள்ளிகளுக்கு தேவைப்படும் குறிப்பிட்ட தேவைகளை தாங்களே வழங்கிடவோ அல்லது நன்கொடைகள் மூலமாகவோ 5 முதல் 7 வருடங்களுக்கு செயல்படுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

## 3.40 பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுமை

தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் பள்ளிக் கல்வித் துறைக்கென தனித்தன்மை வாய்ந்த இணையதளம்



(www.pallikalvi.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த இணையதளம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுகிறது. பல்வேறு நிர்வாக செயல்பாடுகளுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இம்மின்னணு நிர்வாக செயல்பாடு மூலம் பள்ளிக் கல்வித் துறையில் வெளிப்படையான மற்றும் துரிதமான நிர்வாகம் சாத்தியமாகும்.

## 3.41 இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியம் வரைதல், வினாடி வினா, இசை, கவிதை எழுதுதல், பரதநாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் போன்ற பல போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பள்ளி அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும் இறுதியாக மாநில அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

## 4.அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் மைய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் இடைநிலைக் கல்வியை (9 மற்றும் 10ம் வகுப்பு) அனைவருக்கும் அளித்தல் என்ற இலக்கை எட்டுவதற்காக தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 14–18 வயதுள்ள அனைத்து பள்ளி வயது மாணவர்களுக்கும் அவர்களது இருப்பிடத்திற்கருகே தரமான, மேம்பட்ட இடைநிலைக் கல்வியைத் தருவது என்ற தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

### 4.1. தொலைநோக்கு

- ❖ ஐந்து கி.மீ. தொலைவிற்குள் பள்ளி வசதியற்ற குடியிருப்புகளுக்கு ஒரு உயர் நிலைப் பள்ளியையும், 7–10 கி.மீ. தொலைவிற்குள் ஒரு மேல்நிலைப்பள்ளியையும் ஏற்படுத்துதல்.
- ❖ 2013ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வியை அளித்து 2020ஆம் ஆண்டிற்குள் நூறு விழுக்காடு மொத்த சேர்க்கையை உறுதி செய்தலும், தக்க வைத்தலும்.
- ❖ பொருளாதாரத்தில் நலிவுற்றோர், கல்வியில் பின் தங்கியோர், கிராமப்புறத்தில் வசிக்கும் மாணவியர் மற்றும் இயலாத் தன்மையுடையோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் ஆகியோருக்கு இவர்கள் வசிக்குமிடத்திற்கு அருகில் தரமான இடைநிலைக் கல்வியைத் தருதல்.



### 4.2. இலக்கு

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்; ஏற்கனவே உள்ள இடைநிலைப் பள்ளிகளை மேம்படுத்தும் வகையில் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல். இதற்கான செலவினம் 11ஆம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் 75:25 என்ற விகிதத்திலும் 12ஆம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் 50:50 என்ற விகிதத்திலும் மைய மாநில அரசுகளால் இத்திட்ட செலவுகள் பகிர்ந்து கொள்ளப்படும்.

### 4.3. செயல்பாடுகள்

கடந்த இரண்டு ஆண்டுகளைக் காட்டிலும் 2011–12ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.1628.58 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டில் செலவிடப்படாமல் இருந்த ரூ.509.18 கோடி ஒதுக்கீட்டுடன் ஆக மொத்தம் ரூ.2137.76 கோடி நிதி இவ்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாடுகள்.

- ❖ நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்.
- ❖ ஏற்கனவே உள்ள பள்ளிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, அறிவியல் ஆய்வகம் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- ❖ கூடுதல் ஆசிரியர் பணியிடங்களும் ஆசிரியரல்லாத பணியிடங்களும் ஏற்படுத்துதல்.
- ❖ ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி வழங்குதல்.

❖ மலைப் பகுதிகளில் ஆசிரியர் குடியிருப்புகளைக் கட்டுதல்.

❖ பள்ளிகளில் பெரிய அளவிலான பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.

❖ பள்ளிக்கு ரூ.50,000/– வீதம் பள்ளிகளுக்கு பள்ளி மானியம் வழங்குதல்.

❖ பள்ளிகளில் சிறிய அளவிலான பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்ளுதல்.

❖ மாணவர்களுக்குச் கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல்.

**4.4. மாதிரிப் பள்ளிகள்**

நாடு முழுவதும் கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் 6000 மாதிரிப் பள்ளிகளை மைய அரசு உதவியுடன் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கிராமப் பகுதிகளிலுள்ள திறமையான மாணவர்கள் பயனடைவர். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 44 கல்வியில் பின் தங்கிய ஒன்றியங்களில் 18 மாதிரிப் பள்ளிகள்தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் 26 மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

**4.5. மாணவியர் விடுதி**

கிராமப்புற மாணவியர் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை முடிக்கவும், தொடர்ந்து படிக்கவும் மைய அரசு நிதியுதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திட்டமே ‘‘மாணவியர் விடுதிகள் திட்டமாகும்’’.



மைய அரசின் உதவியுடன் 9 முதல் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் கிராமப்புற மாணவியர் கல்வியைத் தொடர்ந்து படிக்கும் வகையில் தங்கும் விடுதிகள் கட்டித்தருதல். இதற்கான செலவு மைய மற்றும் மாநில அரசுகளால் 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 14 முதல் 18 வயதிற்குட்பட்ட 9 முதல் 12ம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவிகளுக்காக தமிழகத்தில் மாணவியர் விடுதிகள் கட்டப்படவுள்ளன.

ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவியர் தங்கிப் பயில்வர். இத்திட்டமானது அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இதன் மூலம் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயாவில் தங்கி எட்டாம் வகுப்புவரை படித்து முடிக்கும் மாணவியரை மேல்நிலைக் கல்வி வரை தொடர்ந்து படிக்க வழிவகை செய்யப்படுவதுடன் மாணவியர் இடைநிற்றலைத் தவிர்த்து இடைநிலைக் கல்வியை நிறைவு செய்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் கல்வியில் பின் தங்கியுள்ள ஒன்றியங்களில் உள்ள கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய மாணவியர்களுக்கு உண்டு உறைவிட வசதிகளுடன் கல்வி பயிலும் வகையில் உருவாக்கப்பட்ட அரிய திட்டமாகும்

## 5. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

மெட்ரிகுலேசன் பள்ளிகளின் இயக்ககம் தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்த நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. தற்பொழுது 3758 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இவ்வியக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

**5.1. தொலை நோக்கு:**

அனைத்து பள்ளி வயது மாணவர்களுக்கும் ஆங்கில வழி பயிற்று மொழி மூலம் தரமான கல்வி கிடைப்பதற்கு உதவுதல் மற்றும் நவீன முறை கற்பித்தல் உத்தி வாயிலாக ஆசிரியர் பணியினை மேம்படுத்த உறுதி செய்வதாகும்.

**5.2. குறிக்கோள்கள்:**

❖ மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் முறையை எளிமை படுத்துதல்.

❖ அங்கீகரிக்கப்பட்ட மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் விபரத்தை இணையதளத்தில் வெளியிடல்.

❖ பணியிடைப் பயிற்சியின் மூலம் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல்.

❖ பயிற்சி அளிப்பதன் மூலம் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பணி மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல் .



**5.3. அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்களை மின் அஞ்சல் மூலம் பரிசீலித்து நடைமுறைப் படுத்துதல்.**

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அங்கீகாரம் புதுப்பிக்கப்படுகிறது. அங்கீகாரம் வழங்கும் முறையில் ஏற்படும் காலதாமதத்தால் உருவாகும் இடர்பாடுகளைத் தவிர்க்கவும், அங்கீகாரம் வழங்குவதற்கான பணிகளை வெளிப்படையான முறையில் விரைந்து செயல்படுத்தவும் விண்ணப்பங்களை மின் அஞ்சல் மூலம் பெற்று பரிசீலிக்கும் முறை மேற்கொள்ளப்பட உள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக அடையாள எண் வழங்கி, அவர்களைப் பற்றிய அடிப்படை விபரக்குறிப்புகள் சேகரிக்கப்படும்.

❖ மாணவர்களின் பாடநூல் தேவைப்பட்டியல் மற்றும் பிற செயல்பாடுகளுக்கும் பயன்படுத்துவதற்காக அவர்களைப் பற்றிய விபரக்குறிப்புகளை துல்லியமாகச் சேகரித்தல்.

❖ மாற்றுச் சான்றிதழை "ஸ்மார்ட் கார்டு" மூலம் வழங்குதல்.

❖ அரசு பொதுத்தேர்வு எழுதவுள்ள 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்கும் பணியை எளிதாக்குதல்.

## 6. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் நோக்கமானது, கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைகளைக் கொண்டு ஆசிரியர்களை ஆயத்தப்படுத்துதல் மூலமாக தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தலாகும். ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் 'அனைவருக்கும் தொடக்கக் கல்வி' என்ற கொள்கையை அடைவதற்கான முயற்சியினை மேற்கொண்டு வருகிறது.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், அதனுடைய இலக்குகளை அடைவதற்கு மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் மூலமாக திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. தற்போது 30 மாவட்டங்களில் ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கவும் அவற்றினை கண்காணிப்பதற்கும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கு, அதிகாரம் உள்ளது. தற்போது இவ்வியக்ககத்தின்கீழ் அரசால் நடத்தப்படும் 9 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், அரசு உதவிபெறும் 43 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், தனியாரால் நடத்தப்படும் 680 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன.



### 6.1 தொலைநோக்கு

பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சிகள், புதுமையான அணுகுமுறைகள், மதிப்பீட்டு முறைகள், ஆராய்ச்சிகள், கலைத் திட்டம், பாடநூல்கள் உருவாக்கம் போன்றவை மூலமாக வகுப்பறைகளில் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவது ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் பணியாகும்.

### 6.2 தரமேம்பாட்டுச் செயல்பாடுகள்

தொடக்க, உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான கல்வி மேற்பார்வையாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கு தரமான பல செயல் திட்டங்களை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. அத்தரமிக்க முயற்சி திட்டங்களாவன

- ❖ பணியிடைப்பயிற்சி
- ❖ களப்பயணங்கள்
- ❖ மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்துப் பட்டறைகளும், கருத்தரங்குகளும்
- ❖ செயல் ஆராய்ச்சிகளும், குறுகிய கால ஆராய்ச்சிகளும்

மாநில அரசின் அறிவுறுத்தலுக்கேற்ப கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை அவ்வப்போது மாற்றியமைத்தல், சீரமைத்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### 6.3. இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகள்

- ❖ மாணவர்களிடையே தரமான கற்றலை வெளிக் கொணர்வதை உறுதிப்படுத்துவதற்கு மாநில, மாவட்ட

மற்றும் வட்டார அளவில் தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு தேவை அடிப்படையிலான பணியிடைப் பயிற்சி திட்டங்களை திட்டமிடுதல் வடிவமைத்தல் மற்றும் நெறிப்படுத்துதல் போன்ற பணிகளை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மேற்கொண்டுள்ளது. இத்தொடர் முயற்சி ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், வகுப்பறைகளை மகிழ்வுடன் கற்கும் மையங்களாக மாற்றவும், அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்ற இலக்கை அடையவும் வழிவகுக்கும். 1,20,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இப்பயிற்சியின் மூலம் பயனடைவர்.

❖ ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் இணைந்து தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு தாங்களே செயலாராய்ச்சிகளை மேற்கொண்டு வகுப்பறைகளில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குப் புதுமையான உத்திகளைக் கையாண்டு தீர்வு காண வழிகாட்டுகிறது.

❖ ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், மைசூர் மண்டலக் கல்வியியல் நிறுவனத்துடன் இணைந்து மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன கல்வியாளர்களுக்குக் குறுகிய கால ஆராய்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து மாவட்ட அளவிலான கல்வி இடர்பாடுகளை இனங்கண்டு தீர்வு காணவும், அவர்களின் பணித்திறனை மேம்படுத்திக் கொள்ளவும் ஏற்பாடு செய்து வருகிறது.

❖ அனைவருக்கும் தரமான கல்வி என்ற இலக்கிற்குத் தடையாக உள்ள பிரச்சனைகளை இவ்வியக்ககம் அறிந்து அவற்றைக் களைய, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தேசிய ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT), தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகப் பல்கலைக்கழகம் (NUPEA) போன்ற தேசிய கல்வி நிறுவனங்களின் வல்லுநர்களின் வழிகாட்டுதலுடன் மாநில அளவிலான ஆராய்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்கிறது.



❖ செயலாராய்ச்சிகள், ஆராய்ச்சித் செயல்திட்டங்களின் கண்டுபிடிப்புகளை ஆசிரியர்களுக்கு ஏதுவாக பரவலாக்கி வகுப்பறைக் கற்றலை மேம்படுத்துவது இன்றியமையாதது. இதனைச் செயல்படுத்த, மாநில / மாவட்ட அளவிலான கருத்தரங்குகள், கூட்டங்களை நடத்தி ஆசிரியர்கள் தங்களின் புதுமையான வகுப்பறை உத்திகளை உடன் பணிபுரியும் ஆசிரியர்கள், கல்வியில் அக்கறை உள்ள அனைவருடனும் பகிர்ந்து கொள்ள இவ்வியக்ககம் வழி ஏற்படுத்தித் தருகிறது.

❖ இவ்வியக்ககம், தமது கல்வியாளர்களின் கல்வியறிவு மற்றும் பணித்திறன்களை மேம்படுத்த மத்திய அரசு நிதியுதவியுடன் பிற மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமங்கள், மாநில கல்வி மேலாண்மை போன்ற ஒப்பற்ற கல்வி நிறுவனங்களுக்கு செல்ல கல்விசார் பயணங்களை ஏற்பாடு செய்கிறது.

❖ மதிப்பீட்டு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தித் தேர்வு குறித்த அச்சம் மற்றும் மன அழுத்தத்தினை மாணவர்களிடத்திலிருந்து அகற்ற ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் தேவையான முன்முயற்சிகளை மேற்கொள்ள உள்ளது.

### 6.4. மாநில கல்வி மேலாண்மை பயிற்சி நிறுவனம்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக வளாகத்தில் கல்வித்துறை அலுவலர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் கல்வி மேலாண்மை, திட்டமிடல், மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் போன்றவற்றில் பயிற்சிகளை அளிப்பதற்கு மாநில கல்வி மேலாண்மை பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசு நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள மூன்று அடுக்குக் கட்டடம், கூடிய விரைவில் செயல்பாட்டிற்கு வர உள்ளது.

இப்பயிற்சி நிறுவனம் மூலம் 962 கல்வி அலுவலர்களும் 6,134 தலைமை ஆசிரியர்களும் பயனடைவர்.

**6.5 வாழ்வியல் திறன் கல்வித்திட்டம்**

ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் உயர் மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் வளரிளம் பருவ மாணவர்களின் உடல்நலம் பேணுதலின் தேவையை உணர்ந்துள்ளது. இதற்கென தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துடன் இணைந்து ஒவ்வொரு உயர் மற்றும் மேனிலைப் பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கும் (ஒத்த வயதினர்), ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து பள்ளி முழுமைக்கும் வாழ்வியல் திறன் கல்வியைப் பயிற்சியாக வடிவமைத்து அளித்து வருகிறது. இப்பயிற்சி, மாணவர்களுக்குச் சிக்கலான சூழ்நிலைகளிலும் தெளிவாக முடிவெடுக்கும் திறனை வளர்க்கிறது. அச்சுறுத்தும் நோய்களான எய்ட்ஸ் மற்றும் போதை மருந்து பழக்கவழக்கங்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வது பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதற்கும், உலகச் சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ள வாழ்வியல் திறன்களை வளர்ப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் 10,000 உயர் மற்றும் மேனிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 20,000 ஆசிரியர்கள் 20,000 மாணவர்கள் பயனடைவர்.

**6.6. கல்வித்தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்**

ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், முழுமையான தொழில் நுட்ப உபகரணங்களுடன் கூடிய கல்வித்



தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தைக் கொண்டுள்ளது. இந்நிலையம் கல்வி தொடர்பான ஒலி–ஒளி நாடாக்களையும் குறுந்தகடுகளையும் உருவாக்கி வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் பெரும்பாலான காணொளி மென்பொருள்கள் தற்போது தமிழகப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் செயல்வழிக்கற்றல், படைப்பாற்றல் கல்வி போன்ற கற்றல் முறைகளின் வகுப்பறை நிகழ்வுகள் மற்றும் புதுமையான உத்திகளை மையப்படுத்தி உள்ளன. இவை அரசு தொலைக்காட்சி மூலம் வாரந்தோறும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் **காண்போம் கற்போம்** என்ற நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

**6.7. கல்வி செயற்கைக்கோள் ஒளிபரப்பு**

கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள செயற்கைக்கோள் தொடர்பு முனையம் தொலைத்தொடர்பில் உள்ள பயிற்சியாளர்கள் மற்றும் வல்லுநர்களின் இருவழி கருத்துப் பரிமாற்றம் நிகழ உதவுகிறது. தேசியகல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமம், தேசிய அளவில் தமது சிறப்புத் திட்டங்களை ஒளிபரப்ப இதனை நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. மத்திய மற்றும் மாநில அரசின் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் செயற்கைக்கோள் ஒளிபரப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

**6.8. வலைத்தளம்**

ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சமீபத்தில் இணையதளத்தில் புதிய முகவரியில் தமது இயக்ககம்

பற்றிய தகவல்களைத் தொகுத்து அளித்துள்ளது. http//:www.dtert.tn.nic.in என்ற வலைத்தள முகவரியில் அளிக்கப்பட்டுள்ள இத்தகவல்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

**6.9. தேசிய மக்கள்தொகைக் கல்வித்திட்டம்**

மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், தேசிய மக்கள்தொகைக் கல்வித்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நோய்த்தொற்று, பாலின விழிப்புணர்வு, ஒத்த வயதினரின் ஆதிக்கம், போதைப் பழக்கங்கள், மற்றும் பாலின விகிதாச்சாரம் போன்ற சமூகப்பிரச்சனைகளை மையப்படுத்தி மக்கள்தொகைக் கல்வி தொடர்பாக மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டியில் வட்டார, மாவட்ட, மற்றும் மாநில அளவிலான உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பங்கேற்கின்றனர். தமிழ்நாட்டின் பழங்குடியினர் வசிக்கும் வட்டாரங்களைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு மக்கள்தொகை பெருக்கத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும் மக்கள்தொகைக் கருத்துக்களை ஒட்டிய ஆராய்ச்சிகளும் நிகழ்த்தப்படுகின்றன.

**6.10. நாட்டுநலப்பணித் திட்டம்**

ஆசிரியர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், தமது கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் நாட்டு



நலப்பணித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மாணவ ஆசிரியர்களது நடத்தையை நெறிப்படுத்தவும் அவர்களது சேவை மனப்பான்மை, நம்பகத்தன்மை, அர்ப்பணிப்பு மனப்பான்மை, நேர்மை போன்ற நன்னெறிகளை வளர்க்கவும் உதவுகிறது. மாநிலமெங்கும் உள்ள 34 நாட்டுநலப் பணித்திட்ட மையங்கள் மூலம் 1,700 நாட்டுநலப்பணித் திட்ட ஆர்வலர்கள், திட்டப்பணிகளில் ஈடுபட்டு இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறார்கள். கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்துதல் வாயிலாக பள்ளி வளாகங்களைத் தூய்மைப்படுத்துதல், அரசு நலத்திட்டங்கள் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனித உரிமைகள், பெண்கள் முன்னேற்றம், பேரிடர் மேலாண்மை, எச்.ஐ.வி / எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு மற்றும் இதர சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 7.பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

தமிழ்நாட்டில் எழுத்தறிவற்ற 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் முழுமையான எழுத்தறிவு பெற செய்தல் மூலமாக மக்களாட்சி அமைப்பில் தமது கடமை மற்றும் பொறுப்புகள் சார்ந்த விழிப்புணர்வினை பொது மக்களிடையே ஏற்படுத்துவதற்காக இவ்வியக்ககம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில எழுத்தறிவு 80.33 சதவிகிதமாகும். இதில் ஆண்கள் எழுத்தறிவு 86.81 சதவிகிதமாகவும், பெண்கள் எழுத்தறிவு 73.86 சதவிகிதமாகவும் உள்ளது. தேசிய எழுத்தறிவுச் சதவிகிதத்தைக் காட்டிலும் தமிழ்நாட்டின் மொத்த எழுத்தறிவு சதவிகிதம் 6.29 அளவு அதிகமாகவே உள்ள போதிலும் பெண்கள் எழுத்தறிவை உயர்த்த அதிக முக்கியத்துவம் தர வேண்டியுள்ளது. எனினும், 100 சதவிகித எழுத்தறிவை அடைவதே நமது மாநிலத்தின் முக்கியமான இலக்காகும்.

### 7.1.தொலை நோக்கு

- ❖ முழு எழுத்தறிவுத் திட்ட இலக்கை அடைதல்
- ❖ எழுத்தறிவற்ற 15 வயதுக்கு மேற்பட்டோர், பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர், பள்ளிக்கு செல்லாதோர், ஆகியோருக்கான வாழ்நாள் முழுவதும் பொருத்தமான, பயனுடைய எழுத்தறிவைப் பெற பல்வகை முயற்சிகள் மற்றும் வழிமுறைகள் மூலம் வாய்ப்பளித்தல்



### 7.2.செயல் நோக்கு:

- ❖ 15 வயதிற்கு மேல் உள்ள அனைத்து எழுத்தறிவற்றவர்களுக்கும் எழுத்தறிவினை அளித்தல்.
- ❖ எழுத்தறிவு சதவீதத்தில் ஆண் பெண் இடையில் நிலவும் வேற்றுமையை குறைக்கும் நோக்கத்துடன் மகளிர் எழுத்தறிவில் மிக பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

### 7.3. இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகள்

*கற்கும் பாரதம் – 2012*

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் **"கற்கும் பாரதம் 2012"** எனும் திட்டம் தேசிய அளவில் மகளிர் எழுத்தறிவு நிலை 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள **365** மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதில் கிராமப்புற எழுத்தறிவற்ற மகளிர் குறிப்பாக 15 வயதுடைய மற்றும் அதற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர், சிறுபான்மையினர் (முஸ்லிம்) மற்றும் நலிவடைந்த பிரிவினர் பயன்பெறுவர். தமிழகத்தில் ''கற்கும் பாரதம்'' திட்டம் விழுப்புரம், தர்மபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், திருவண்ணாமலை, அரியலூர் ஆகிய 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

*முதற்கட்டம்*

- ❖ முதற்கட்டமாக இத்திட்டம் விழுப்புரம், தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர் ஆகிய 5 மாவட்டங்களில் செயல்பாட்டில் உள்ளது.

- 68 ஒன்றியங்களில் உள்ள 2091 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 81.73 கோடி ஆகும்.
- மைய மாநில அரசுகள் 75:25 விகிதத்தில் நிதியைப் பகிர்ந்து கொள்ளும்.
- முதல் தவணையாக மைய மற்றும் மாநில அரசுகள் ரூ.9.36 / ரூ.3.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.
- மொத்த பயனாளிகள் 14,26,060 ஆவர்.

*இரண்டாம் கட்டம்*

- இரண்டாம் கட்டமாக இத்திட்டம் திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 24 ஒன்றியங்களில் உள்ள 1061 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.24.07 கோடி ஆகும்
- மைய மாநில அரசுகள் 75:25 விகிதத்தில் நிதியைப் பகிர்ந்து கொள்ளும்.
- முதற் தவணையாக மைய மற்றும் மாநில அரசுகள் ரூ.3.42 / ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.
- மொத்தப் பயனாளிகள் 3,20,439 ஆவர்.

*மாநில வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம்:*

தமிழ்நாட்டில் "கற்கும் பாரதம்" என்ற புதிய எழுத்தறிவு திட்டம் 7 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றது. ஏனைய 25 மாவட்டங்களில் இப்புதிய திட்டம் செயல்படுத்த வாய்ப்பில்லை என்பதால் இம்மாவட்டங்களில் மாநில வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம் என்ற திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவு அளித்திடவும், புதிதாக கற்றவர்களில் கற்றல் திறனைத் தக்க வைத்துக் கொள்ளவும் ஏற்கனவே நடைபெற்று வந்த வளர்கல்வித் திட்ட மையங்களை பயன்படுத்தவும் மாநில வயது வந்தோர் எழுத்தறிவு திட்டம் என்ற திட்டம் செல்படுத்தப்படுகிறது. முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக தமிழகத்தினை மாற்றி அமைக்க இத்திட்டம் நல்வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

## 8.அரசுத் தேர்வுகள் இயக்ககம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 1975ஆம் ஆண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்புக்களுக்கான அரசுப் பொதுத் தேர்வுகளை நடத்தும் முக்கிய நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இதைத் தவிர ஆசிரியர் கல்வி பயிற்சிக்கான பட்டயத் தேர்வும், அரசு தொழில் நுட்ப சான்றிதழ் தேர்வும் நடத்தப்படுகிறது.

### 8.1 தொலை நோக்கு

அரசுப் பொதுத் தேர்வுகளை எவ்வித ஒழுங்கீனச் செயல்பாட்டிற்கும் இடம் கொடுக்காமல் நேர்மையாகவும், ஒளிவுமறைவற்ற முறையிலும் நடத்துதல்; மாணவர்கள் தங்கள் திறன்களை அச்சமின்றி இயல்பான பள்ளிச் சூழலில் வெளிக் கொண்டுவர வழி செய்தல்; ஒவ்வொரு மாணவனுக்கும் இரகசியக் குறியீடுகளுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்.

### 8.2 கடமையும், பொறுப்பும்

- ❖ அரசுப் பொதுத் தேர்வுகளை நடத்தி உரிய காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுவது அரசுத் தேர்வுத் துறையின் தலையாய கடமையாகும்.
- ❖ துறையால் வழங்கப்பட்ட பொதுத் தேர்வுகளுக்கான சான்றிதழ்களை தவற விட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, உரிய கட்டணம் பெற்று அவர்களுக்கு சான்றிதழ்களின் இரண்டாம்படி/ சான்றளிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- ❖ மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் சேர்க்கப்படும் மாணவர்கள், இத்துறையால் அளிக்கப்பெறும் சான்றிதழ்களின் அடிப்படையில் வேலை வாய்ப்பைப்



பெறுபவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் சமர்ப்பிக்கும் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை இத்துறை சரிபார்த்து வழங்குகிறது. போலிச் சான்றிதழ் அளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

- ❖ அரசுப் பொதுத் தேர்வுகளின் மறு மதிப்பீடு / மறுகூட்டல் செய்யப்பட்டபின் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குகிறது.
- ❖ இம்மாநிலத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று பிற மாநிலத்தில் மேல்படிப்பைத் தொடர விழையும் நபர்களுக்கு புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- ❖ மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிக்கான தேர்வுகள் உட்பட 14 தேர்வுகளும் பணியாளர் தேர்வாணையத்தின் 12 தேர்வுகளும் இத்துறையால் நடத்தப்படுகிறது.
- ❖ தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளுக்கான மந்தணத் தாள்களை அச்சிட்டு மையங்களுக்கு அனுப்பிடும் பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.
- ❖ மதிப்பெண் சான்றிதழ்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விவரம் அச்சடித்துத் தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 8.3 மாணவர் பெறும் பயன்கள்

- ❖ மதிப்பெண் மறுகூட்டல் கோரும் வாய்ப்பு 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வர்கள் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வுகளுக்கான அனைத்துப் பாடங்களுக்கும் அளிக்கப்படுகிறது.
- ❖ பன்னிரெண்டாம் வகுப்பின் விடைத்தாள்களின் அச்சுப்பகர்ப்பு நகல் அனைத்துப் பாடங்களுக்கும் மாணவர்கள் சரிபார்ப்பதற்காக வழங்கப்படுகிறது.

❖ பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் அனைத்து பாடங்களுக்கும் விடைத்தாள்கள் மறுமதிப்பீட்டு வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

❖ மார்ச் மாதத்தில் நடைபெறும் பொதுத் தேர்வுகளில் ஒன்று முதல் மூன்று பாடங்களில் தோல்வியுறும் பள்ளி மாணவர்கள் அந்த முழுக் கல்வி ஆண்டையும் வீணாக்காமல் இருக்கும் பொருட்டு ஜூன்–ஜூலை மாதங்களில் உடனடியாக சிறப்புத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்று உயர்கல்வி கற்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 8.4 தேசிய அளவிலான திறனறித் தேர்வுகள்

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமத்தின் சார்பில் தேசியத் திறனாய்வுத் தேர்வு இவ்வியக்ககத்தால் நடத்தப்பட்டு வருகிறது. 7ஆம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் 60% மற்றும் அதற்கு மேலும் பெற்று 8ஆம் வகுப்பு பயின்றுகொண்டிருக்கும் மாணவர்கள் இத்தேர்வெழுத தகுதியானவர்கள். முதற்கட்ட தேர்வின் முடிவுகளை இயக்ககம் வெளியிட்ட பின்னர் இத்தேர்வுத் திட்டத்தின் இரண்டாம்கட்ட தேசிய அளவிலான தேர்வு நடத்தப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 9ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி பட்டப்படிப்பு வரை உதவித் தொகை வழங்கப்படும்.

### 8.5. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி கல்வி உதவித் தொகை

தமிழக அரசு, அரசுத் தேர்வு துறைகள் இயக்ககத்திற்கு தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி கல்வி உதவித் தொகை தேர்வை நடத்த அனுமதியளித்துள்ளது. இத்தேர்வு குடும்ப ஆண்டு



வருமானம் ரூ.1,50,000க்கு மிகாமல் உள்ள பெற்றோர்களின் ஒன்பதாம் வகுப்பு பயிலும் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நடைபெறும். இத்தேர்வில் வெற்றி பெறும் மாணவ–மாணவியர் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை மாதம் தோறும் ரூ500/–வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.6000/– கல்வி உதவித் தொகையாக நான்கு ஆண்டுகள் பெறுவார்கள். இந்த கல்வி உதவித் தொகை 6695 மாணவர்களுக்கு வழங்க நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் விண்ணப்பிப்போர், தேர்ச்சி விகிதம் இவற்றைப் பொறுத்து பயனாளிகள் எண்ணிக்கை மாறுபடும்.

### 8.6. தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு

தமிழகத்தின் கிராமப்புறம் சார்ந்த மாணவர்களை ஊக்குவிப்பதற்காக, அரசினால் அளிக்கப்படும் சலுகைகளை பயன்படுத்திக் கொள்ளும் வகையினில் தமிழ்நாடு ஊரக மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு இத்துறையினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஆண்டு வருமானம் ஒரு லட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பெற்றோர்களின் குழந்தைகள் நடப்பு கல்வி ஆண்டில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்காக (சென்னை, பாண்டிச்சேரி நீங்கலாக) ஆண்டுதோறும் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 மாணவிகளும், 50 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு ஆண்டுதோறும் ரூபாய் 1000/–

வீதம் தொடர்ந்து நான்காண்டுகளுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**8.7. வலைத்தளம்**

கால அட்டவணை, விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம், இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் தொடர்பாக சான்றிதழ் நகல் மற்றும் மதிப்பெண் பட்டியலின் சான்றொப்பமிடப்பட்ட நகலுக்கான (CCM) கட்டணம் போன்ற விவரங்களை வெளியிடுவதற்காக இத்துறைக்கென தனிப்பட்ட வலைத்தளம் உள்ளது. வலைத்தள முகவரி www.tn.gov.in/dge மாணவ சமுதாயத்தின் நலனுக்காக முந்தைய ஆண்டுகளின் மேல்நிலைக் கல்வி மற்றும் எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் இத்துறையின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.



## 9.ஆசிரியர் தேர்வு வாரியம்

தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களை பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு பள்ளிகளுக்கு தெரிவுசெய்யும் பணிகளுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் 1987ல் உருவாக்கப்பட்டது. ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க அரசின் ஆணைக்கிணங்க பல்வேறுபட்ட தேர்வுமுறைகளை ஆசிரியர் தேர்வு வாரியம் கையாளுகிறது. அரசு தெரிவிக்கும் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இத்தேர்வானது ஒளிவு மறைவற்ற முறையில் OMR மற்றும் ICR ஆகிய மதிப்பீட்டு முறைகளைக் கையாண்டு நடத்தப்படுகிறது.

**9.1. தொலை நோக்கு**

மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கும் வகையில் தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களை தெரிவு செய்தல். ஆசிரியர் தேர்வு வாரியம் 2011–12ஆம் ஆண்டிற்கான கீழ்கண்ட வகையான ஆசிரியர்களை தெரிவு செய்யும்.

- ❖ 11 மற்றும் 12ஆம் வகுப்பிற்கான முதுகலை ஆசிரியர்கள்.
- ❖ 6 முதல் 10ஆம் வகுப்பிற்கான பட்டதாரி ஆசிரியர்கள்.
- ❖ 1 முதல் 5ஆம் வகுப்பிற்கான இடைநிலை ஆசிரியர்கள்
- ❖ ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கான முதுநிலை விரிவுரையாளர்கள்.
- ❖ அரசு சட்டக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பல்தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்கள்.

### 9.2. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் சிறப்பியல்புகள்

ஆசிரியர் தேர்வு வாரியம் http:/trb.tn.nic.in என்ற வலைத்தளத்தின் மூலமாக, காலிப் பணியிட விவரங்கள், தேர்வுக்கான அட்டவணைகள், அனைத்து தேர்வர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தலில் பெற்ற மதிப்பெண்கள், வேலை வாய்ப்பக பதிவு மூப்பின் இனவாரி சுழற்சி வரையறுக்கப்பட்ட தேதி மற்றும் இறுதி தேர்ச்சிப் பட்டியல் ஆகிய பணிகளின் பல்வேறு நிலைகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிட்டுவருகிறது. இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையிலான முறையில் மக்கள் தெரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாரியத்தால் 2010–2011ம் கல்வியாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3665 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். மேலும் 45 சட்டக் கல்லூரி விரிவுரையாளர் பணியிடங்களையும், 161 பொறியியல் கல்லூரிவிரிவுரையாளர் பணியிடங்களையும் மற்றும் 139 பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர் பணியிடங்களையும் நிரப்ப தெரிவு செய்யப்படும்.



## 10.தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், “நிறுவனங்கள் பதிவுச் சட்டம் 1860”-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. தரமான பாடநூல்களை தேவைப்படும் அனைவருக்கும் உரிய காலத்தில் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது இக்கழகத்தின் நோக்கமாகும்.

### 10.1. தொலை நோக்கு

அதிகரிக்கும் தேவைக்கேற்ப தரமான மேம்பட்ட அச்சுத் திறனுடன் கூடிய பாட நூல்களை வழங்குதல்.

### 10.2. பாடநூல்களின் விவரம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையில் 484 தலைப்புகளில் பாடநூல்களை (தொகுதி-1 மற்றும் தொகுதி 2 உட்பட) அச்சிடுகிறது. பாடநூல்கள் மற்றும் தொழிற் கல்விக்கான பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டய பயிற்சிக்கான வளநூல்கள் ஆகியவை பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

- ❖ அனைத்து மாணவர்களுக்கும் அனைத்துப் பாடநூல்களையும் வழங்குதல்.
- ❖ மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான தொழிற்கல்வி பாடநூல்கள் வழங்குதல்.

- அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு பருவங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கான பாடநூல்கள் வழங்குதல்.
- ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள் வழங்குதல்.
- ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்குதல்.
- பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக வினா வங்கி, மாதிரி வினாவங்கி மற்றும் தீர்வு நூல்கள் வழங்குதல்.

### 10.3. இலவசப் பாடநூல் அச்சிடுதல்

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், மாநிலப் பாடத்திட்டத்தினை பின்பற்றும் சுயநிதிப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் பாடநூல்கள் அச்சிட்டு இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் வனத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான அனைத்துப் பாடநூல்களும் இலவசமாக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப்பட்டு இக்கழக வட்டார அலுவலகங்கள் மூலமாக அந்தந்தத்துறைகளுக்கு நேரிடையாக வழங்கப்படுகின்றன.



### 10.4. பிறமாநிலங்களில் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குதல்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச்சங்கம், அகமதாபாத் நகராட்சி, அந்தமான் நிகோபார் நிர்வாகங்கள், கொச்சி தமிழ் ஐக்கிய சங்கம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக ஆண்டு தோறும் பாடநூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகிறது.

## 11. பொது நூலகம்

### 11.1 தொலைநோக்கு

நகரம் மற்றும் கிராமங்களில் வசிக்கும் பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை, உரிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நல்ல தரமான நூல்கள் ஆகியவற்றை நூலகங்களுக்கு வழங்குவதன் மூலம் ஊக்குவிப்பதே பொது நூலக இயக்ககத்தின் தொலைநோக்குப் பார்வையாகும்.

### 11.2. குறிக்கோள்கள்

- ❖ நூலகங்களுக்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
- ❖ நூலகங்களுக்குத் தரமான புத்தகங்களை வழங்குதல் (இதழ்கள், பத்திரிகைகள், நாளிதழ்கள் போன்றவை)
- ❖ நூலகச் சேவையை மேம்படுத்த நவீனக் கருவிகளை நூலகங்களில் நிறுவுதல்
- ❖ நிதி ஆதாரங்களைப் பெருக்கி நூலக வசதியினை மேம்படுத்துதல்

### 11.3. செயல்பாடுகள்

- ❖ தேசிய அறிவுசார் ஆணையத்தின் பரிந்துரைக்கு இணங்கப் பொது நூலகங்களைத் தகவல் மற்றும் அறிவு மையங்களாக மாற்றியமைத்தல்
- ❖ பொது நூலக நிர்வாகத்தில் மின் ஆளுமையை அறிமுகம் செய்தல்
- ❖ அனைவருக்கும் நூலகம் என்ற இலக்கினை அடையும் வகையில் புதிய நூலகங்களைத் திறத்தல்



- ❖ நூலகங்களை இணையதளத்தின் மூலம் இணைத்து நூல் தேடலை எளிமையாக்குதல்
- ❖ பழைமையான மற்றும் அரிய வகை நூல்களை மின்னனு முறையில் படி எடுத்தல்
- ❖ நூலகச் சேவைகளை மேம்படுத்த நிதியாதாரங்களைப் பெருக்குதல்
- ❖ சிறிய நகரங்களில் கூடுதலாகக் குடிமைப்பணிப் பயிற்சி மையங்களைத் தோற்றுவித்தல்
- ❖ புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் துணையுடன் புத்தகப் பூங்காக்கள் அமைத்தல்.

"தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948''–ன்படி தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் நிறுவப்பட்டன. பொது நூலகங்களின் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் 1972–ல் பொதுநூலக இயக்ககம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு பொதுநூலக இயக்ககத்தின் கீழ் பல்வேறு நிலைகளில் தமிழகமெங்கும் நூலகங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட மைய நூலகங்கள் | .. | 32 |
| 2. | கிளை நூலகங்கள் | .. | 1664 |
| 3. | நடமாடும் நூலகங்கள் | .. | 10 |
| 4. | ஊர்ப்புற நூலகங்கள் | .. | 1795 |
| 5. | பகுதி நேர நூலகங்கள் | .. | 539 |
| 6. | கன்னிமாரா மாநில மைய நூலகம் | .. | 1 |
| 7. | அண்ணா நூற்றாண்டு நூலகம் | .. | 1 |
| | **மொத்தம்** | | **4042** |

## 11.4. கன்னிமாரா மாநில மைய நூலகம், சென்னை:

கன்னிமாரா பொது நூலகம் மாநில மைய நூலகமாகவும், நூல்கள் விநியோகச் (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) சட்டம் 1954–ன்படி தேசிய வைப்பு நூலகமாகவும் செயல்படுகிறது. இந்நூலகம் 6.85 இலட்சம் நூல்களைக் கொண்டு பல்வேறு பிரிவுகளுடன் பொது மக்களுக்குச் சிறந்த நூலகப்பணி ஆற்றி வருகின்றது. கன்னிமாரா பொது நூலகம் முழுமையும் ரூ.20.00 இலட்சத்தில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மேலும் கன்னிமாரா பொது நூலகத்தைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

## 11.5. கணினி மயமாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்

நூலகங்களின் செயல்பாட்டை உயர்த்தவும் வாசகர்களுக்குச் சிறந்த நூலகச் சேவை அளிக்கவும் நூலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. கீழ்க்காணும் நூலகங்களில் கணிப்பொறி, இணையம் மற்றும் மின்னஞ்சல் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- ❖ கன்னிமாரா மாநில மைய நூலகம், சென்னை.
- ❖ 32 மாவட்ட மைய நூலகங்கள்
- ❖ மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 100 கிளை நூலகங்கள்.
- ❖ இராஜா ராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளையின் இணை மானிய நிதியுதவியின் கீழ் 174 நூலகங்கள்.



- ❖ கன்னிமாரா பொது நூலகத்துடன் மாவட்டம் மற்றும் வட்டங்களில் உள்ள நூலகங்களை வலைதளம் வாயிலாக இணைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

## 11.6. நூல்களை மின்னணு மயமாக்குதல்

பழம் பெருமை வாய்ந்த அரிய நூல்களை மின்னணு முறையில் படியெடுத்து மென் நகலாகப் பதிவு செய்து பாதுகாக்கும் பொருட்டு கன்னிமாரா நூலகத்தில் 7 ஸ்கேனர்கள் நிறுவப்பட்டுக் கணிசமான அளவில் நூல்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கப்படுகின்றன.

## 11.7. நூலகத் தானியக்க வசதி

மாவட்ட மைய நூலகங்களில் நூலகச் சிறப்பு மென்பொருளைப் பயன்படுத்தி நூல்கள் வழங்குதல் மற்றும் திரும்பப்பெறுதல் போன்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மேலும் மேம்படுத்திப் பல்வேறு நூலகங்களை ஒருங்கிணைத்து வாசகர்கள் அதிகப் பலன்களைப் பெறும் வகையில் தனித்தன்மை வாய்ந்த புதிய நூலக மென்பொருளை உருவாக்கும் பணி நடைபெற்றுவருகிறது. சென்னை, அண்ணா பல்கலைக்கழக வல்லுநர்களின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டு இப்பணி நடைபெற்றுவருகிறது.

## 11.8. பொது நூலகச் செய்திமடல்

பொது நூலக இயக்ககம் சார்பாக, "**பொது நூலகச் செய்திமடல்**" வெளியிடப்பட்டு வருகிறது. இச்செய்திமடலில் பொது நூலக இயக்ககத்தின் வளர்ச்சிப் பணிகள், நூலக இயக்கம் தொடர்பான செய்திகள், மாவட்டச் செய்திகள், பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பல்வேறு அரசாணைகள் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

## 11.9. வாசகர் வட்டம்

பொது நூலக செயல்பாடுகளில் பொது மக்கள் பங்கேற்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களை கொண்ட "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் வாயிலாக நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, சுதந்திர தின விழா, குடியரசு தின விழா உள்ளிட்ட பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 11.10. இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை

கொல்கத்தாவில் உள்ள இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மத்திய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் நிறுவனம் ஆகும். இவ்வறக்கட்டளை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு இணைமானியம் அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு



பொது நூலக இயக்ககம் இந்த அறக்கட்டளையில் இருந்து ஆண்டுதோறும் அதிகபட்சமாக ரூ600.00 இலட்சம் இணை மானியம் பெற்று கருத்தரங்குகள், பயிற்சிகள் நடத்துவது, சிறுவர் பிரிவு ஏற்படுத்துவது, புதிய நூல்களை வாங்குவது, நூலக உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 11.11. குடிமைப்பணிக் கல்வி மையங்கள்

சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்துவதற்கு உதவும் வகையில் நூலகங்களில் அத்தேர்வுகளுக்கான நூல்களுடைய "குடிமைப்பணிக் கல்வி மையங்கள்" என்ற பிரிவு செயல்பட்டு வருகின்றது. 32 மாவட்ட மைய நூலகங்கள், வட்டத் தலைநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 150 நூலகங்கள், சிறிய நகரங்களிலுள்ள 50 நூலகங்கள் ஆக மொத்தம் 232 நூலகங்களில் இக்குடிமைப்பணிக் கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 11.12. நமது உலகம், நூலகம்

நூலகச் செயல்பாடுகளில் மக்களின் நாட்டத்தை அதிகப் படுத்தவும், நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவும் "நமது உலகம், நூலகம்" என்னும் புதிய திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வாரமும் நூலகத்தைச் சுத்தம் செய்தல், நூல்களை முறையாக அடுக்கி வைத்தல், போன்ற பல்வேறு

செயல்பாடுகளை மேற்கொண்டு வாசகர்களைக் கவரும் வகையில் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**11.13. நூலகப் போட்டிகள்**

பொது நூலக இயக்ககம் மாணவ, மாணவியரை நூலகத்தில் உறுப்பினராகச் சேர்த்து படிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்த பல்வேறு வகையான போட்டிகளை 2011–2012ஆம் ஆண்டு நடத்த உள்ளது.

**11.14. பூங்காக்களில் புத்தகம்**

புத்தகக் கண்காட்சிக்கு முன்பாகவே பொது நூலக இயக்ககமும், புத்தகப் பதிப்பாளர்களும் இணைந்து காலையிலும், மாலையிலும், பூங்காக்களில் புதிய புத்தகங்களைக் காட்சிக்கு வைத்து காலை நேரத்தில் நடைப்பயிற்சி செய்யும் பொது மக்கள் அவற்றை எடுத்துப் படித்து, அப்புத்தகங்களின் மீது தமது நாட்டத்தைப் பெருக்கிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற பெரு நகரங்களில் இம்முயற்சி நல்ல பலனைத் தந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**11.15. ஐந்தாண்டு தொலைநோக்குச் செயல் திட்டம்**

❖ வருவாய்க் கோட்ட அளவில் 77 வருவாய் கோட்ட நூலகம் ஏற்படுத்தப்படும். மேலும், இந்நூலகங்களை மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் கன்னிமாரா பொது நூலகத்துடன் இணைத்து நூலக ஆதாரத்தைப் பெருக்கி சிறப்பாகச் சேவை செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



❖ வருவாய்க் கோட்ட நூலகங்களுக்கு வசதியான கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு செய்து கொடுக்கவும் மற்றும் இந்நூலகங்கள் கணினி மற்றும் இணையதள வசதிகளுடன் மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ அனைத்து வருவாய்க் கோட்ட நூலகங்களிலும் பொது மக்கள் நூல்களை விரைவாக எடுக்கும் பொருட்டு பிரத்யேகமான உறுப்பினர் குறியீட்டு எண்ணைக் கொண்டு இணையவழி பொது பெயர்ப்பட்டியல் நுழைவுரிமை (Online Public Access Catalogue, OPAC) பயன்படுத்தப்படும்.

❖ வருவாய்க்கோட்ட நூலகங்களை செம்மையாக நிர்வகிக்க KOHA என்ற இலவச நூலக மென்பொருள் அமைக்கப்படும்.

❖ அனைத்து வருவாய்க் கோட்ட நூலகங்களில் இணையவழி நூலக சேவை (Online Library Services) ஏற்படுத்தப்படும்.

❖ தேவைப்படும் பகுதிகளில் புதிய ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்படும்.

❖ புதிய தமிழ் / ஆங்கில நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கப்படும்.

❖ 100 பகுதிநேர நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாகவும், 100 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகவும் தரம் உயர்த்தப்படும்.

❖ அனைத்து நூலகங்களிலும் மின்னணு இதழ்கள் (e-journal) மற்றும் மின்னணு நூல்கள் (e-books) கிடைக்க வழிவகைச் செய்யப்படும்.

❖ அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் தகவல் மையம் (Information Centres) அமைக்கப்படும்.

❖ குடிமைப்பணி மையத்தை கணினி மயமாக்கல், இணையதள வசதி மற்றும் குளிரூட்டும் வசதிகளைச் செய்து மாணவர்களுக்குப் படிக்கும் வசதிகள் உயர்த்தப்படும்.

### 11.16. செயல்திட்டம் (2011–12)

2011–12 ஆம் ஆண்டு பின்வரும் திட்டங்கள் பொது நூலக நிதியிலிருந்து செயல்படுத்தப்படவுள்ளன.

❖ ரூ.25 கோடியில் புத்தகங்கள் வாங்குதல்.

❖ ரூ.25 கோடியில் புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுதல்.

❖ ரூ.10 கோடி செலவில் கட்டட பராமரிப்பு மற்றும் இதரச் செலவினங்கள் மேற்கொள்ளுதல்.

❖ 26 மாவட்ட நூலக அலுவலர் பணியிடங்கள் நியமித்தல்.

❖ 77 வருவாய்க் கோட்டங்களில் வட்டம் மற்றும் கிராம நிலையிலுள்ள நூலகங்களைத் திறம்படக் கண்காணிக்கும் பொருட்டு 77 வருவாய்க் கோட்ட நூலகங்கள் ஏற்படுத்துதல். இந்நூலகங்களுக்கான கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை நபார்டு வங்கி (NABARD) உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

***சி.வி.சண்முகம்***
பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத் துறை அமைச்சர்